


| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு ககூகூங, சித்திரை | பரல் |
| --- | --- | --- |
| ஙசா | மே, 1962 | சூ |

## முதிய மூதறிஞர்

# டாக்டர் விசுவேசுரையாவின் மறைவு

ஒருவர் நெடுநாள் நலத்துடன் வாழ்ந்து வடுவிலா வான் புகழ் எய்தி, முழுமுதல் இறைவன் விழுமிய திருவடிப் பேரின்பந் துய்த்தற்குத் தெய்வ வழிபாடும், மெய்வகை ஒழுக்கமும் உயிர் உடல், இருகண் போன்று ஏதுக்களாக யாண்டும் மிளிர்வனவாகும்

நம் மூதறிஞரவர்கள் சிறு பருவமுதல் இறுதிநாள் வரையும் தெய்வ வழிபாட்டில் இம்மியும் குன்றாச் செம்மையாளர். ஒழுக்கமே உயிரினும் விழுமியதெனக் கொண்டொழுகிய உரனுடையுள்ளத்தவர். வடுவஞ்சி வாழ்ந்துவந்த வாய்மையர். நடுநிலை தவிரா நாட்டத்தர். சலியா உழைப்புடைச் சான்றவர். பயனுடைப் புதியன கண்டு பாருக்களித்த பண்பினர். பிறர்க்கென வாழ்ந்த பெரியவர். பொறுமையும் அடக்கமும் போற்றியொழுகிய பொற்பினர். நூற்றிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து நுவலரிய தொண்டு பல இயற்றிய தோலா நல்லிசை மேலோர்.

இத்தகைப் பெரியார் பங்களூரில் தம் வளமனையின்கண் 1962 ஏப்பிரல் திங்கள் 14ஆம் நாள் சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு எல்லாம் வல்ல முழுமுத லிறைவன் திருவடி நீழலை எய்தினமையுணர்ந்து நனிமிக வருந்துகின்றாம். இவ்விழப்புப் பொதுவாகப் பாரத நாட்டுக்கும் சிறப்பாகத் தென்னகத்துக்கும் ஈடுசெய்ய வொண்ணாத பேரிழப்பேயாகும். அப்பெரியாரின் வாழ்க்கை நம்மனோர்க்கு நல்வழி காட்டியாக நின்று நயம் பயக்குமென்பது உறுதி. அது வருமாறு :

### பிறப்பு

மைசூர் மாநிலத்துக் கோலார் மாவட்டத்தைச் சேர்ந்தது முத்தணஹள்ளி என்னும் சிற்றூர். இத்திருவூரின்கண் மறையோம்பாளர் மரபில் நம் பெரியார் தோன்றினர். இவர் தோன்றிய காலம் 1861 செப்டம்பர் 15ஆம் நாள் ஆகும். இவர் திருப்பெயர் விசுவேசுரவையா.

### கல்வி

இவர் தொடக்கக் கல்வியினைச் சிக்பலாப்பூரில் கற்றனர். இளமை முதலே எதையும் ஊக்கமுடன் கடுமுயற்சி கொண்டு ஒழுங்காகச் செய்து முடிக்கும் கடமையாற்றலினைக் கொண்டவர். இவர்தம் அருமைத் தாயார் இவர்தம் வாழ்க்கையினை உருவாக்குவதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தனர். பழமையான மத நூல்களைப் படிப்பதிலும், புண்ணியத் திருவூர்களுக்குப் பதிநடை சென்று வழிபடுந் தவத்திலும் சிறந்திருந்தனர் தந்தையார்.

அத்தகைய அருமைத் தந்தையார் இவர்தம் 15ஆம் அகவையில் இறையடியை எய்தினர். பின் 1875 இல் மேற்படிப்பின் பொருட்டுப் பங்களூர் சென்றார். ஊக்கமொடு கற்று 1881 இல் இளங்கலை (பி.ஏ.,)ப் பட்டம் பெற்றார். தமக்குரிய வீட்டில் மிகுதியான வசதியில்லை. தங்குவதற்குரிய வீடோ செலவுக்கு வேண்டும் பணமோ இல்லாமல் பெரிதும் வருந்தினர். எனவே ஒரு குடகுக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்குப் பாடம் படிப்பித்து வந்தார் அந்த வீட்டிலேயே இரவுதுயில் கொள்ளும்படியான முட்டுப்பாடும் ஏற்பட்டது.

வைகறையில் எழுந்து அவ்வீட்டுக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லி வைப்பர். பிறகு தம் அம்மான் வீட்டுக்குச்சென்று உணவு அருந்துவர். பின் கல்லூரிக்குச் சென்று கற்பர். அந்நாள் மத்தியக் கல்லூரி முதல்வராக விருந்த 'சார்லஸ் வாட்டர்ஸ்' என்பவர் இவர்தம் நலனில் கருத்துக் கொண்டனர். இவருடைய காலம் தவறாமை, கடமை உணர்ச்சி, ஒழுக்கம் முதலியவற்றைக் கண்டு கழிபேருவகை பூத்தனர். அதன்மேல் அவர் பரிசாகத் தாங் கையாண்டு வந்த தம்முடைய 'வெப்ஸ்டர்' ஆங்கில அகராதியை அளித்தனர். நம் பெரியார் அப்பரிசின் அருமை கருதி அப் புத்தகத்தைப் பொன்னேபோற் போற்றித் தம் மேசையின்மீது எப்பொழுதும் வைத்துள்ளனர். மேலும் அத்துரைமகனார் இலண்டன் மாநகருக்குச் செல்வதற்கு முன் நம் பெரியார்க்கு இரண்டு பொற்கொலுசுகள் பரிசிலாக வழங்கியுள்ளனர். அவற்றையும் நனிமிகப் பேணி வைத்துள்ளனர் என்பது பெரிதும் போற்றிப் புகழ்தற்குரி தொன்றாகும்.

## வெளி மாநிலக்கல்வி

அந்நாள் மைசூர்த் திவானாக விருந்த திரு. 'அரங்காச் சார்லு' நம் பெரியாரை மேற்படிப்பின் பொருட்டு உதவிப்படி யளித்துப் புனா நகருக்கு அனுப்பி வைத்தனர். புனா அறிவியற் கல்லூரியில் 1883 இல் பொறியியல் பட்டப் படிப்பில் பம்பாய் மாநிலத்திலேயே முதல்வராகத் தேறினார்.

தேறிய நான்கு திங்களுக்குப்பின் பம்பாய் மாநில அரசியல் மராமத்துத் துறையில் உதவிப் பொறியாளராகச் சேர்ந்து பணி புரிந்தார். 1908 இல் தமக்குப் பொறி முதல்வர் நிலை கிட்டாதென்று தெரிய வந்ததும் தம் விருப்பத்தின் மேல் பொறியியல் ஆணை (சூப்பிரண்டெண்டு) யாளர் நிலையை மேற்கொண்டனர். அப்பணியில் திறமையுடன் இருபத்து நான்கு ஆண்டுகள் அரும்பணி புரிந்தனர்.

## முன்னேற்ற முயல்வு

நம் பெரியார் நல்வினைப் பயன், எதிர் நோக்காவாக்கம், பிறருதவி முதலியவற்றையே தம் முன்னேற்றத்திற்காம் பெருந் துணையெனக் கொள்ளாது 'உழப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்னும் உண்மையினை உளங்கொண்டு கடைப்பிடித்து உழைப்பற்ற ஒவ்வாக் குறுக்கு வழிகளில் பட்டம் பதவிகளைப் பெறக் கனவிலும் விழைந்திலர். இங்ஙனம் விழைவது ஒருவனுக்குத் தன்னல நாட்டமாகும். இருபத்துநான்காண்டுகள் கடுமையான உழைப்புழைத்து ஓய்வு பெற்றனர்.

## ஓய்வின் பின்னும் உழைப்பு

ஓய்வு பெற்ற ஊதியத்தராய பின்னும் பயனற்ற இன்ப நல வாழ்வைச் சிறிதும் விழையாது உழைப்பே உயர்நல வின்பம் எனக்கருதி இடையறா வுழைப்பினை மேற்கொள்வாராயினர். பம்பாய் மாநிலப் பணியிலிருக்கும்போது பெரும்பாலும் மேனிலைக்கு வந்தவர் புது முயற்சி ஏதும் எடுப்பதில்லை. முன்னுள்ளோர் சென்ற நெறியே செல்வதியல்பு. இவர் அங்ஙனம் செல்லாது கடும் உழைப்பின் பயனாகப் புதிய பொறிக் கருவிகளைத் தாமாகவே கண்டு பிடித்தனர். வட்டார நீர்ப்பாசனப் பணியிலிருந்த ஞான்று 'தானியங்கு மதகுக் கதவுகள்' ஆக்கியுள்ளனர். அதனால் உலகுற்ற உறுபயன் எண்ணில. புனா குடிநீர்த் திட்டத்திற்கு வேண்டும் பணி புரிந்தனர்.

தானியங்கு மதகுத் திட்டம் புனாவில் தொடங்கியஞான்று 10 நாட்களுக்கு ஒரு தடவை முறை போட்டு நீர்ப்பாசனம் செய்யும் முறைக்குப் பால கங்காதர திலகர் போன்ற அரசியற்

கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இச் சிக்கலைத் தீர்க்க நம் பெரியார் எல்லாக் கட்சியின் ஆட்பேருளர் (பிரதிநிதிகள்)களை யும் பம்பாயில் கூட்டுவித்து ஒரு மாநாடு நிகழ்த்துவித்தனர். அதில் தாம் மேற்கொண்டுள்ள நீர்ப்பாசன முறையின் நன்மை களை எடுத்து விளக்கினர். பிறகு வேளாண்மாந்தர் இதனை ஏற்றுக் கொண்டனர்.

இம்முறை மைசூரிலும் கையாளப்பட்டது. இதனால் அளவில்லாத பயிர் செய்யப்படாதிருந்த நிலங்கள் பயிர் செய்யப் பட்டன. 1903 இல் நீர்ப்பாசன ஆய்வுக் குழு இவரை மிகவும் பாராட்டிற்று. நலத்துறை நீர்ப்பாசனப் பொறியியற்றிணைகளிலும் நம் பெரியார் சிறந்த செயல்களைச் செய்து முடித்துள்ளனர். 'ஏடன' போன்ற தொலை நாடுகளிலிருந்தும இதைப் பொறுத் தள்ள தக்க சூழ்வுகள் நம் பெரியார்பால் உசாவித் தெரிநது கொள்ளபபட்டன. 1893 இல் சுக்கூர் (சிந்து) சென்று நகரக் குடி தண்ணீர், சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றினர். ஐதராப்பாத்திலும் பொறியியலராகப் பணி புரிந்தனர்.

தானியங்கும் கதவுகளையுடைய மதகுகளைத் தாமாகவே கண்டுபிடித்த அருஞ்செயலுக்காக நம் பெரியார் ஆக்கப்பாட் டுரிமை (பேடெண்டு) யைப் பெற்றார். அரசியலார் இதன் பொருட்டு உரிமைத்தொகை வழங்க முன்வந்தனர். அதனைக் காரணங்காட்டி மறுத்தனர். அஃதாவது தாம் அரசியல் அலுவலிலிருந்தபோது அது கண்டுபிடிக்கப்பட்டதாகுமென்பது. நாட்டில் நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதற்குச் 'சர்க்கா' லிஸ்காட் தலைமையில் ஓர் ஆய்வுக்குழு ஏற்படுததப்பட்டது. 1901இல் நம் பெரியார் அரசியலாரால் இதன்கண் அமர்த்தப் பட்டனர். புனாவில் 14 ஆண்டுகள் வாழ்ந்ததன வாயிலாகத் திரு. மகாதேவ கோவிந்தரானடே, திரு. கோபாலகிருட்டிண கோகலே, திரு. பாலகங்காதரதிலகர் முதலிய பெரியார்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். பம்பாயிலும் மைசூரிலும் அரசியல்பணிபுரிந்த காலங்களில் சோம்பேறித்தன்மை, கையூட்டு முதலிய தீமைகளைக் கடுமையான எதிர்பபுக்களுக்கிடையே ஒழிக்கமுற்பட்டார்.

### கிருட்டிணராசு சாகரணை

கிருட்டிணராசு சாகரில் காவிரியின் குறுக்கே அணை கட்டும் எண்ணத்தை நம் பெரியார் தெரிவித்தனர். அப் பொழுது செலவு மிகுதியாகுமெனறு மேல் நிலையிலுள்ளவர்கள் மன்னர்க்குக் கூறித் திட்டத்தை நிறைவேற்றுவாறு செய்து விட்டனர். இதனையுணர்ந்த நம் பெரியார் குறுகிய கால விடு முறையில் சென்றனர். பின்பு மன்னர் இத்திட்டத்தை ஒப்புக்

கொண்டு இதனை நிறைவேற்றும் பெரிய பொறுப்பை நம் பெரியாரிடமே ஒப்புவித்தனர். மேட்டூர்அணை கட்டக்கருதியிருந்த சென்னை மாநில அரசியலாரும் இதனை எதிர்த்தனர். இந்திய அரசியல் தலைவர் ஆர்டிஞ்சுச்சிமான் தலையிட்டதால் இத்திட்டம் நிறைவேற்ற ஒப்புக்கொள்ளப்பட்டது.

1912இல் மைசூர் மன்னர் சூழ்வின் பேரில் மைசூர்த் திவான் நிலைமையை ஏற்றனர். மன்னரும் பொருள்நிலை, கல்வி தொழில், வேளாண்மை முதலிய துறைகள் மிகுவிரைவாக வளர்ச்சி எய்த விரும்பினர். இதன் பொருட்டே மன்னர் நம் பெரியாரையும் விரும்பினர். நம் பெரியார் வேண்டியவர்களுக்கெனச் செய்யப்படும் வீண் ஆதரவுச்சலுகைகளை வெறுத்தனர். தம் உறவினர்கள் ஏழை என்று தெரிந்ததால் போதிய கல்வி பெற இளைஞர்களுக்குப் பொருளளித்துவர இணங்கினர். தம் உறவினர்களுக்கு மாதந்தோறும் ஒழுங்காகப் பணம் அளித்துவர நல்ல ஏற்பாடுகளைச் செய்தார்.

மைசூர் திவான் நிலையிலிருந்து விலகியபின் மைசூரிலும் வெளியிலும் 1952இல் கங்கையின் குறுக்கே பாலங்கட்டுவது உட்படப் பல்வேறு நீர்ப்பாசன மின்விசைத் திட்டங்களை நிறைவேற்றினர். ஒரிசாவில் வெள்ளத்தைத் தடுத்தற்பொருட்டு மகாநதிமீது ஹிராகுத் முதலிய அணைகட்டுவதற்கு நம் பெரியாரின் அறிக்கைகளே அடிப்படையிட்டன.

மேலும் இந்தியாவில் மோட்டார், விமானத் தொழிற்சாலைகள் நிறுவுவதில் விரைவான அக்கறை காட்டினர். 1956இல் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில் விரிவான சுற்றுலாச் செய்தனர். தொழில்களைத் தொடங்குவதற்குரிய வாய்ப்புக் குறிப்புக்கள் குறித்து நன்றாக அளவளாவுரையாடினர். அப்பொழுதிருந்த இந்திய அரசியலார் இவர்தம் திட்டங்களையெல்லாம் மறுத்தனர். இரண்டாவது உலகப் போரில் டங்கர்க் தோல்விக்குப் பிறகே பங்களூரில் விமானத் தொழிற்சாலையமைக்கப் பிரித்தானிய அரசியலார் இணங்கினர்.

'பங்களூர் இந்திய அறிவியற் கழகத்' தோற்றுவாய்க்கும் நம் பெரியாரே முதற் காரணமாவர். 1938 முதல் 1947 வரை இவரே அதன் தலைவராகவுமிருந்தனர். 1927 - 1955 டாடா கம்பெனி இயக்குநராகவும் பணிபுரிந்தனர். 'அகில இந்திய உற்பத்தியாளர் நிறுவனத்தைத்' தோற்றுவித்தவரும் நம் பெரியாரேயாவர். திட்டமிட்டமுறையில் தொழில் பெருக்கம் செய்வதே நம் பெரியாரின் முதன்மை நோக்கமாகும். நம் பெரியாரின் நூற்றுண்டு நிறைவிழா 15—9—60 பங்களூரில்ந ிகழ்ந்து

சிறப்புடன் நிகழ்ந்தது. அதன் விளக்கமும் வரலாற்றுச் சுருக்கமும் செல்வி-சிலம்பு நடு, பரல் உ, பக்கம் அக—அ சுவரை வந்துள்ளன.

இறுதி

நம் பெரியார் கடந்த ஓராண்டுக் காலமாகப் படுத்த படுக்கையாகவே இருந்தனர். எனினும் ஓரளவு நினைவாற்றலுடன் இருந்தனர். இறப்பதற்கு இருபது நாட்களாக அவர் மிகவும் வலுக்குறைவாகவே காணப்பட்டனர். எனினும் இறுதித் துன்பம் ஏதுமின்றி நம் பெரியாரின் ஆவி இனிமை இயல்பொடு பிரிந்தது. ஆவிபிரியும் நேரத்து அவர் தம் படுக்கையருகே அவரின் மருமான் திரு. கிருட்டிணமூர்த்தி இருந்தனர். டாக்டர் விசுவேசுரவையாவின் இறப்புச் செய்தி நகரில் காட்டுத்தீப்போல் கடுகப் பரவியது.

உடனே நம் பெரியாரின் வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் இணைந்துள்ள எல்லாப் பெரியாரும் 'சிறுநுண்ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்ப' நிரல்பட வந்து சேர்ந்தனர். மறைந்தவர்க்குச் செய்யவேண்டிய இறுதிப்பெருமதிப்பினைச் செய்தனர். வீட்டின் தாழ்வாரத்தில் டாக்டர் அவர்களின் பொன்மேனி ஒரு நீண்டசாய்வு நாற்காலியில் வைக்கப்பட்டிருந்தது. மைசூர் முன்னாள் திவான் திரு. எஸ். மாதவராவ், முன்னாள் படைத்தலைவர் கரியப்பா, மைசூர் அரசியலமைச்சர்கள் பாராளுமன்றம், சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோரும் வந்தனர். மைசூரிலுள்ள முதலமைச்சர். திரு. காந்தி, ஆளுநர் முதலியோர்க்குச் செய்தியறிவிக்கப்பட்டது.

மைசூர்ச் சட்டசபைக் கூட்டம், அரசியலார் அலுவலகம், உயர் நீதி மன்றம், பல பொது நிலையங்கள் முதலியவற்றில் கொடிகள் அரைக்கம்ப உயரத்தில் பறந்தன. கருப்புக் கோடிட்ட அரசியற் சிறப்பு அறிக்கைகள் இவ்விறப்புச் செய்தியினை வெளியிட்டன.

கடந்த 48 ஆண்டுகளாக டாக்டர் விசுவேசுரவையாவின் மருத்துவராகவிருந்து வரும் டாக்டர் நஞ்சப்பா செய்தியாளர்கட்களித்த பேட்டியில் 'கடந்த ஒரு திஙகளாக 'டாக்டர்' விசுவேசுரவையா படுக்கைப் புண்களினால் துன்புற்றனர். இத்துடன் அவர் தம் இடது காலும் கண்களும் பக்கவாதத்தினால் செயலற்றுவிட்டன. இறப்பதற்குமுன் கண்பார்வையை அடியோடு இழந்து விட்டார். இவர் பன்னாட்களுக்கு முன்பே இறந்திருக்கவேண்டும். அவர்தம் உள்ளத்துரனே இதுவரை அவரை உயிருடன் இருக்கச் செய்தது' என்று மொழிந்தனர்.

ஈமச்சடங்குகள்

டாக்டர் மோக்ஷ குண்டம் விசுவேசுரவையாவின் பொன்னுடலுக்கு இரவு 9 மணிக்கு அவர் ஏற்கெனவே தெரிவித்திருந்த விருப்பப்படி அவர்தம் பிறப்புத் திருவூராகிய முத்தணஹள்ளியில் எரியூட்டப் பட்டது. அந்நேரத்துச் சிறிது தூறலும் விழுந்தது. இங்கிருந்து 36 கல் தொலைவிலுள்ள அவர்தம் ஊருக்கு அவர் பொன் மேனியின் ஊர்வலம் புறப்பட்டது. அப்பொழுது ஏறத்தாழ 50 ஆயிரம் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாகச் சாலையினிரு பக்கமும் நிறைந்து நின்றனர். தேசியக் கொடிகளால் மூடப்பட்டிருந்த பொன் மேனியினை உயர்தரப் போலீசு அதிகாரிகள் ஸ்ட்ரெச்சரில் வைத்து சிறிது தூரம் வரை எடுத்துச் சென்று நறுமணப் பூக்களால் ஒப்பனை செய்யப்பட்டிருந்த பண்டப் பேருந்து வண்டி (லாரி) யில் அமர்த்தினர். அளவிறந்த மாலைகள் அப்பொன்மேனி மீது சாத்தப்பட்டிருந்தன. அரசியல் இறைவரியமைச்சர் திரு. எம். சி. கிருட்டிணப்பாவும், டாக்டர் நஞ்சப்பாவும், திரு. எம் ஆர். கிருட்டிண மூர்த்தியும் அவ்வுந்து வண்டியின்கண் அமர்ந்திருந்தனர்.

மைசூர் ரிசர்வ் போலீஸ் படை முன் செல்ல ஊர்வலம் சரியாக மாலை 4 மணிக்குப் புறப்பட்டது. பொன்மேனி உந்து வண்டியில் வைக்கப் படுவதற்குமுன் உறவினர்கள் வாய்க்கரிசியிட்டனர். இதன் பொருட்டுப் போர்வையினை அகற்றியபோது நண்பர்களால் போடப்பட்டிருந்த நாணயங்களும் நோட்டுக்களும் காணப்பட்டன.

காலஞ்சென்ற நம் பெரியார்க்கு இறுதி மதிப்புத் தெரிவிக்கு முறையில் ராஜ்யப் போலீசார் 24 தடவை குண்டுகள் முழக்கினர். திரு. எம். ஆர். கிருட்டிணமூர்த்தி ஈமத்தீ மூட்டினர். மைசூர் அரசியலார் கொடுத்திருந்த சந்தனக் கட்டைகளால் ஈமம் அமைக்கப்பட்டிருந்தது. ஊர்வலத்தின் முன்னணியில் மைசூர் முதலமைச்சர் எம். ஆர். காந்தி சென்றனர். இறுதிச் சடங்கு நடத்தும் வரை வரித்துறை யமைச்சரும் உடனிருந்தனர்.

நன்மை பல புரிந்து பொன்றா நற்புகழ் பெற்று இறையடி நீழலெய்திய நம் டாக்டர் விசுவேசுரவையாவின் நல்லாவி என்றும் மாறா இன்பமெய்திப் பொன்றாது வாழுமாறு திருவருள் சுரக்கச் 'சிவனெனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி எம்மான்' திருவடியிணையினை இறைஞ்சுகின்றாம்.

அவர்தம் குடும்பத்தார்க்குக் கழகத்தாரின் பரிவும் ஆறுதல் மொழியும் உரியவாகுக.

# மொழிமுதல் அகரச் சகரம்

[திரு. தி. முருகரத்தனம், பி. ஏ. (ஆனர்சு)]

தொல்காப்பியர் மொழிமுதல் எழுத்துக்களைப் பற்றிக் கூறி வருகின்றபோது,

> கதநபம எனும் ஆவைந்தெழுத்தும்
> எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே (தொல்.௬௧)

என்று கூறிவிட்டு அடுத்த நூற்பாவில்,

> சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
> அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே (தொல். ௬௨)

எனச் சகர மெய்யைப் பற்றிக் கூறுகிறார் "அ ஐ ஔ என்னும் மூன்றுயிரெழுத்துககளோடும் கூடிச் சகரமெய் மொழிக்கு முதலில் வாராது. மற்றை உயிர்களோடு மட்டுந்தான் வரும்" என்பது இதன் பொருள். இந்தப் பொருளை ஏற்றுக்கொள் வதிலும் இந்த நூற்பாவையே கூட ஏற்றுக்கொள்வதிலும் அறிஞர் சிலரிடம் கருத்து வேறுபாடும் தயக்கமும் உள்ளன. இந்த நூற்பாவே (தொல். ௬௨) இடைச் செருகல் என்பர் அவ் வறிஞருள் ஒரு சாரார்; மேற்கண்ட நூற்பாக்களில் அடிகள் பிறழ்ந்துள்ளன என்பர் மற்றொருசாரார்; "அவை ஔ எனும் ஒன்றலங்கடையே" என்பதுதான் உண்மையான பாடம் என்பர் பிறிதொருசாரார். மேற்கூறப்பட்ட பொருளை ஏற்றுக் கொள்ளாது இவ்வாறெல்லாம் கூறுதற்கு அமைந்த பெருங் காரணம் இதுதான்: ச, சை, சௌ — இவற்றால் தொடங்கும் சொற்கள் பலப்பல சங்க இலக்கியங்களுள் முதற்கொண்டு வழங்கி வருகின்றமை. சகடு, சமன், சமை, சட்டி, சமழ்ப்பு போன்ற சொற்கள் எடுத்துக்காட்டுகளாம்.

இக் கருத்தினைப் பற்றிய உண்மை முடிவைக் காணத் தமிழ் மொழியின் எழுத்திய லமைப்புத்தான் (Phonological Pattern) துணை செய்யும். இத் துணைகொண்டு இக்கருத்தின் உண்மை காணுவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஒவ்வொரு மொழியின் எழுத்துக்களும் அவற்றின் பிறப் பிடத்தாலும் (Point of Articulation) பிறப்பு முறையாலும் (Manner of Articulation) இனங்களாகப் பிரிக்கப்படக் கூடியன. அவ்வாறு பிரிக்கப்படக்கூடிய ஒவ்வோரினமும் மொழியின் எழுத் தமைப்பில் (Phonological Structure) — அஃதாவது மொழி முதல் இடை கடை நிலைகளிலும், புணர்ச்சியிலும், ஒலித்திரிபு களிலும் — தனக்கென ஒன்றோ பலவோ தன்னுடைய பண்புகள்

என்று கூறும்படி செய்கைகள் பெற்றிருக்கலாம். ஓரினத்தின் செய்கை அவ்வினத்தில் அடங்கிய ஒவ்வோரெழுத்திற்கும் உரியதே.

தொல்காப்பியர் உட்பட்ட தமிழ் இலக்கண ஆசிரியர்களும் தமிழ் எழுத்துக்களை மேற்கண்டவாறு இனங்களாகப் பிரித்திருக்கின்றனர். எடுத்துக் காட்டாக, க ச ட த ப ற என்ற எழுத்துக்கள் அடங்கிய இனம், வல்லினம், பிறப்பு முறை வன்மையாக இருக்கின்ற காரணத்தால் இவ்வாறு இவை வல்லினம்; என ஓரினமாக வகுப்பட்டன. இவையாறும் சொல்லின் இறுதியில் குற்றிய லுகரம் பெறுதல் இவ்வினத்துக்கு மட்டுமே உரிய செய்கை.

தமிழ்மொழியில் மொழிமுதல் எழுத்துக்கள் அமைதல் எழுத்துக்களின் பிறப்பிடத்தை ஒட்டி யிருப்பதாகத் தோன்றுகிறது. இதனைக் கீழ் வருமாறு காணலாம். இதழ் (1), பல் (2), ஈறு (அண்பல்) (3), வல்லண்ணம் (கவிந்த அண்ணம்) (4,5), மெல்லண்ணம் (எலும்பில்லாத தசையண்ணம்) (6) ஆகியவை நா பட்டு ஒலிகள் பிறக்கும் இடங்கள் (Points of Articulation) ஆகும்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| இதழ் | பல் | ஈறு- | வளைநா - | வல்லண்ணம் - | மெல்லண்ணம் |
| ப | த | ற | ட | ச | க |
| ம | ந | ன | ண | ஞ | ங |
| | | ல | ள | | |
| | | ர | ழ | | |
| வ | | | | ய | |

இலக்கண ஆசிரியர்கள் கருத்துப்படியே மேற்கண்ட பாகுபாடு அமைக்கப்பட்டுள்ளது. இதழிலும் பல்லிலும் வல்லண்ணத்திலும் மெல்லண்ணத்திலும் பட்டுப் பிறக்கும் எழுத்துக்கள் மட்டும்தான் தமிழில் மொழி முதலில் வருகின்றன. (ங விதிவிலக்காகலாம்). ஈற்றில் பட்டுப் பிறக்கும் எழுத்துக்களும் நாவளைந்து வல்லண்ணத்தில் பட்டுப் பிறக்கும் எழுத்துக்களும் மொழிமுதலில் வருதல் இல்லை. எழுத்துக்கள் பிறக்கும் இடத்தை ஒட்டித் தமிழ் எழுத்துக்களை மேற்கண்டவாறு ஆறு இனங்களாகப் பிரிக்கலாம். (ச ஞ ய என்பவையும் ட ண ன ழ என்பவையும் வல்லண்ணத்தில் பட்டுப் பிறந்தாலும் ட ண ள ழ என்பவற்றை நாவளைந்து பிறக்கின்ற காரணத்தால் தனி ஓரினமாகப் பிரிக்கலாம்). ஒவ்வோரினத்திற்கும் தனக்கெனப் பண்புகள் உண்டு. நம் ஆராய்ச்சிக்குரிய சகரம் அடங்கிய இனம் வல்லண்ண இனம். நாவளைந்து பிறக்காத இவ்வல்லண்ண எழுத்துக்களாகிய ச ஞ ய என்ற மூன்றெழுத்துக்களுக்கும் பல செய்கைகள் பொதுவாக

இருக்கின்றன. இப்பொதுச் செய்கைகளில் ஒன்றே அகரச் சகரம் பற்றியது. எல்லாப் பொதுச் செய்கைகளையும் அறிவதால் இவ்வகரச் சகரத்தின் உண்மை தெளிவு படும். இப்பொதுச் செய்கைகளைத் தொல்காப்பிய விதிகள் கொண்டும் தொல் காப்பியர் எண்ணியிராத தமிழ்வரலாறு கொண்டும் கீழ் வருகின்ற முறையில் கணக்கிட்டறியலாம்.

முதலாவது செய்கை: ச ஞ ய என்ற இவ்வல்லண்ண மெய்யெழுத்துக்கள் மூன்றும் அகரத்தோடுகூடி மொழி முதலில் வருதல் இல்லை. இது தொல்காப்பியர் விதியே என்பதை அவர் நூற்பாக்களால் அறியலாம்:

ஞ: ஆ எ ஒ
என்னும் மூவுயிர் ஞகாரத் துரிய, (தொல், சுச)
ய: ஆவோ டல்லது யகர முதலாது. (தொல். சுரு)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச்+— | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | — | ஒ | ஓ | — |
| ஞ்+— | ஆ | — | — | — | — | — | எ | — | ஒ | — | — |
| ய்+— | ஆ | — | — | — | — | — | — | — | — | — | — |

"அ ஐ ஔ எனும் மூன்றலங்கடை" என்ற கருத்து இவ்வல் லண்ண இனத்துக்கு உரியது என்பதை மேற்கண்ட விளக்கத் தால் அறியலாம். ச ஞ ய என்ற மூன்றெழுத்துக்களுக்கும் பிறப்பிடம் ஒன்றாக (வல்லண்ணமாக) அமைந்திருத்தல் பற்றியே இவ்வொற்றுமை காணப் படுகிறது. ஆகவே ஞயக்களுக்கு விலக்கப்பட்ட அகரம் சகரத்துக்கும் விலக்கப்பட்டதுதான். இம்மூன்று மெய்களுக்கும் மொழி முதலில் ஆகா என விலக்கப் பட்ட அ ஐ ஔ என்னும் மூன்றுயிர்களும் ஒன்றென்றே கணக்கிடும்படி ஒற்றுமை யுடையனவே. ஐகாரத்திலும் ஔகா ரத்திலும் முன்னைக்கூறு அகரமேயாகும். ஐ = அஇ = அய் = ; ஔ = அஉ = (அவ்) எனப்பிரித்து இதன் உண்மை அறிய லாம் "அகர அகரம் ஐகாரம் ஆகும்" (தொல். ருச.) என்றும் 'அகரம் உகரம் ஔகாரம் ஆகும்." (தொல். ருரு) என்றும் 'அகரத் திம்பர் யகரப்புள்ளியும் ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" (தொல் ருசு.) என்றும் தொல்காப்பியரே கூறிய கருத்துக்கள் இதனை வலியுறுத்தும். அகரம் விலக்கப்பட்டால் அவ்வகரக் கூறடங்கிய ஐயும் ஔவும் விலக்கப்படல் தவிர்க்க முடியாததே. இதனால் "அவை ஔ எனும் ஒன்றலங் கடையே' என்று பாடத்தைத் திருத்துவதும் தவறு என்பது பெறப்படும்.

இரண்டாவது செய்கை: தொல்காப்பியர் காலத்தை அடுத்த சங்ககாலத்திலும் பின்னரும் இவ்வல்லண்ண மெய்களாகிய சஞய மூன்றும் மொழிமுதலில் அகரத்தோடு கூடிவரும் நிலை ஏற்

பட்டது. இந்நிலை மூன்று காரணங்களால் ஏற்பட்டது: 1. அயல்மொழி வரவு. 2. பழந்தமிழ்ச் சொற்கள் திரிதல். 3. ஒலிக் குறிப்புச் சொற்கள் புதிதாகப் படைக்கப் படல். ஒரு மொழியின் வாழ்வில் இவை போல்வன எதிர்பார்க்கக் கூடியனதாம். இவ்வாறு வழக்குக்கு வந்த சொற்களைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுக்கள் விளக்கும்.

1. அயல்மொழிவரவு: சகரம்: சதுக்கம்; சந்தி; சரணத்தார்; சடை; சங்கம்; சையம் (∠சகியம்); சன்னம்; சமணர்; சத்தி; சக்கரம்; சமயம்; சரடு (∠த்ராடு) [தெலுங்கு] போன்று பல சொற்கள் சமக்கிருதம், பிராகிருதம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளிலிருந்து வந்தேறின. சகடம் (∠சகடா [வ. மொ.] ∠சாகாடு [தமிழ்]); சந்தனம் (∠சந்தன [வ. மொ.] ∠சாந்து [தமிழ்]) என்றவை சமக்கிருதத்திற்குச் சென்று மீண்டும் தமிழில் சகர முதல்களாக வந்தேறின.

ஞகரம்: ஞமன் (∠யமன்); ஞதி (∠யதி) ஞத்துவம்.

யகரம்: யவனர் ∠Ionians [கிரேக்கம்]). யமன்; யக்கியம்; யசமான்; யமகம்.

2. பழந்தமிழ்ச் சொற்கள் திரிதல்: சகரம்: சமன்; சமம் (∠முமன் ∠ஞெமன்); சம்பு; சண்பு (∠கண்பு) சவட்டுதல் (∠கவட்டுதல் = மெல்லுதல்)

ஞகரம்: ஞமன் (∠ஞெமன் = சமன்); ஞமர்தல் (∠ஞெமிர்தல்); ஞமலி (∠ஞெமலி. ஞெமல் = அலை. ஞெமலி = அலைவது, ஞரல் (∠நரல்); ஞண்டு (∠ஞெண்டு ∠நண்டு); ஞயம் (∠நயம்)

யகரம்: யண்டு (∠ஞண்டு ∠நண்டு)

ஒலிக் குறிப்புச் சொற்கள்: சகரம்: சக்கு. சடார்; சரட்டு; சல சல; சரேல்; சவ்வு; சளக்கு; சருகு; சரி; சதங்கை; சலங்கை; சப்பு; சல்லரி; சல்லடை; சறுக்கு....

ஞகரம்; ஞரேல்; ஞஞ்ஞை;

யகரத்துக் கில்லை.

அகரத்தோடு மட்டு மல்லாது தொல்காப்பியரால் விலக்கப்பட்ட பிற உயிர்களோடும் கூடி இம் மெய்கள் மொழிமுதலாதல் தெரிந்தது.

மூன்றுவது செய்கை: தொல்காப்பியர் காலத்தை அடுத்தும் சங்க காலத்தை அடுத்தும் சஞய என்னும் இவ்வல்லண்ணமெய்கள் எல்லா உயிரோடும் கூடி மொழி முதல் வரும் நிலையினை இழந்தன. இடைக்காலத் தமிழிலும் இன்றைய பேச்சிலும்

மொழிமுதல் ஞகரமும் யகரமும் இல்லவே இல்லை. ஞகரம் நகர மானது; யகரம் திரிந்தது; கெட்டது : ஞாண் < நாண்; ஞால் < நால்; ஞெகிழ் < நெகிழ்; ஞொள்கு < நொள்கு; ஞாயிறு < நாயிறு; ஞெமிடு < நிமுண்டு; யாங்கு < எங்கு; யாவன் < ஏவன்; யாம் < எம்; யாறு < ஆறு; யாமை < ஆமை <.

ஞகரம் யகரம் போன்று சகரம் மொழிமுதலில் முழுக்கக் கெடாது தமிழின் சில கிளை மொழிகளில் கெட்டும் சிலவற்றில் கெடாதும் வழங்கியிருக்கின்றது போலும். சாய் : ஆய்; சான்றோர்:ஆன்றோர்; சிமிழ்:இமிழ்; சிலிர்:இலிர்; சிறகு:இறகு; சுருள்: உருள்; சுழல் : உழல்; சமணர் : அமணர்; சவை : அவை; சேமம் : ஏமம்; சந்தி : அந்தி; செட்டி : எட்டி வந்தேறிய வட சொற்களும் இச்சகரக் கேட்டுக் கிடமாயின.

நாலாவது செய்கை : தமிழில் ஆகாரத்தைக் கொண்ட அடிச் சொற்கள் உருபுகள் பிற ஏற்கின்றபோது அகரமாகக் குறுகின்றன. காட்டு: காண் : கண்டான்; தா : தந்தான்; தான் : தனக்கு. ஆனால் சஞய என்ற இவ்வல்லண்ண எழுத்துக்களைப் பொறுத்த வரையில் ஆகாரம் அண்ணச் சாயல் பெற்று (Palatalization) அகரமாகாது இகரம் அல்லது எகரமாகிறது : சா : செத்தான்; ஞாயில் : எயில்; ஞாலம் : நிலம்; ஞால் : நில்; யாங்கு : எங்கு; யாவன் : எவன்; யாம் : ஞெமை (= ஒரு மரம்); யாடு : இடையன்; யாம் : எம்.

முடிவு : சஞய ஆகிய மூன்று மெய்களும் நாவல்லண்ணத்தில் பட்டுப் பிறக்கும் எழுத்துக்கள். இக்காரணத்தால் ஓரினமாகக் கருதத்தக்கன. ஆகவே ஒத்த பண்புகளைக் கொண்டிருக்கின்றன. இவ்வாறாகவே, மேற் கூறப்பட்ட நான்கு செய்கைகளையும் பெறுகின்றன. ஞகர யகரத்துக்குரியன சகரத்துக்கும் உரியன. ஞகரமும் யகரமும் அகரத்தோடு கூடி மொழி முதலில் வாராதது போலவே சகரமும் அகரத்தோடு கூடி மொழி முதலில் வாராது. தொல்காப்பியர் காலத்திற்குப்பின் ஞகரயகரம் அகரத்தை மொழி முதலில் ஏற்றபோது சகரமும் ஏற்றது. இன்று வழங்கும் அகரத்தோடு கூடிய சகர முதல்மொழிகள் தொல்காப்பியர் காலத்திற்குப் பின் மேல் எடுத்துக் காட்டப்பட்ட (இரண்டாவது செய்கையில்) மூன்று காரணங்களால் வழக்கிற்கு வந்தன. தொல்காப்பியர் அறியாத்திசை மொழிக் குரியனவாக இருந்து பின் இலக்கியம் ஏறிய சொற்களாகவும் அவை இருத்தல் கூடும். தமிழ் மொழியின் எழுத்தியல் அமைப்பினைத் (Phonological Pattern) தெரிந்து கண்ட உண்மைகள் இவை. ஆகவே இக் கட்டுரையின் தொடக்கத்தில் காட்டப்பட்ட தொல்காப்பியர் நூற்பாவும் அதற்குக் கூறப்பட்ட உரையும் சரியானவையே.

# 'ஐந்துடன் மாண்டது அமைச்சு'

[பண்டித வித்துவான், சைவப் புலவர்,
சித்தாந்த நன்மணி, கு. சுந்தரமூர்த்தி]

ஐந்துடன் மாண்டது அமைச்சு என்னும் தொடர் திருக்குறள் அமைச்சியலின்கண் உள்ளதாகும். இதன்கண் ஐந்து எனக் குறிக்கப்பட்டது எது என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுளது. அதனை ஈண்டு ஆராய்வாம்.

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு"

என்பது குறள். இக்குறளில் உள்ள ஐந்து என்னும் தொகைக்குப் பரிமேலழகர் நீங்கலாக ஏனைய உரையாசிரியர்கள் எல்லாம் இக்குறளின் கண்ணேயே விளக்கம் காட்டினார்கள். பரிமேலழகர் மட்டும் இக்குறளின்கண் உள்ள ஐந்து என்னும் தொகைக்கு, இதற்கு முன்குறளாகிய

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு."

என்னும் திருக்குறளை விளக்கமாகக் காட்டினார். இக் குறளின் கண் கருவி, காலம், செய்கை, செய்யும் அருவினை என நான்கேயிருப்பினும் கருவியைத் தானையும், பொருளும் எனப்பிரித்து, ஏனைய மூன்றையும் கூட்டி ஐந்து என் விளக்கம் தந்தார் பரிமேலழகர்,

இங்ஙனம் ஒரு குறளின் கண் உள்ள தொகைக்கு இன்னொரு குறளில் விளக்கம் காண்பது மரபிற்கு ஏலாததாகும். இந்நெறியைப் பரிமேலழகரும் இந்த ஓரிடத்து மட்டும் கொண்டனரேயன்றி, வேறுயாண்டும் கொண்டிலர். அங்ஙனமாகவும் இக் குறளுக்கு மட்டும் அங்ஙனம் கொள்வானேன் எனில் அதற்குரிய காரணங்களையும் அவரே தருகின்றார். அவர் கூறும் காரணங்களாவன மூன்று. அம்மூன்றினையும் அவை பொருந்து மாற்றையும் காண்பாம்.

1. "வன்கண் குடிகாத்தல்"-என்னும் திருக்குறளில் "ஆள்வினை யொடு" என இருக்கவேண்டியது, "ஆள்வினையோடு" என நீண்டிருப்பது, "கருவியும் காலமும்"— என்னும் குறளில்உள்ள (தாம் அமைத்துக் கொண்ட) ஐந்தினையும் குறிப்பதற்கேயாகும் என்பர்.

இது அவ்வளவு பொருந்துவதன்று. எண்ணைக் குறிக்கும் இடைச் சொற்களுள் ஒடு, ஓடு என்னும் இரண்டும் உரியனவேயாகும். 'மடந்தையொடு எம்மிடை நட்பு' 'உடம்பொடுயிரிடை நட்பு' என்றெல்லாம் பிறவிடங் களில் ஒடுவினையைப் பயன்படுத்திய ஆசிரியர், ஈண்டு இன் னோசைக்காக 'ஒடு'—என்னும் எண்ணிடைச் சொல்லினைப் பயன்படுத்தினரே யன்றிப் பரிமேலழகர் கூறுமாறு போல முன்னைய குறட்கருத்தினைத் தழுவுதற் கன்றாம்.

2. அடுத்து அவர் கூறும் காரணம் வியப்பான தாகும். "வன்கண் குடிகாத்தல்" என்ற குறளில் கூறப் பட்டிருக்கும், தறுகண்மை, குடிகளைக் காத்தல், நீதிநூல் களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதல், முயற்சி ஆகிய நான்கு குணங்களுடன், "கருவியும் செய்கையும்" என்னும் குறளில் கூறப்பட்ட (தாமாக அமைத்துக் கொண்ட) ஐந்து குணங்களுடன் கூடியே அமைச்சர் சிறப்பர் என்பது.

"கருவியும் காலமும்"—என்னும் குறட்பாவினையும், "வன்கண் குடிகாத்தல்"—என்னும் குறட்பாவினையும் மேற் போக்காகப் படிப்பினும் இவ்வுரையின் பொருத்தம் இன் மையை அறியலாம். ஆசிரியர் திருவள்ளுவனார் 'கருவியும் காலமும்' 'என்னும் திருக்குறளில் ஐந்து என்னும் தொகை தந்திலர். 'வன்கண் குடிகாத்தல்'—என்னும் குறளிலோ ஐந்து என்னும் தொகை தந்துள்ளார். இங்ஙனமாகவும் தொகை தந்திருக்கும் குறட்பாவிற்கு நான்கெனக் கணக் கிட்டும், தொகை தாராத குறட்பாவிற்கு ஐந்து என்னும் தொகையைவலியுறுத்திக்கூறியும் இடர்ப்படுவது வேண்டாத தொன்றாகும். இவ்வொன்பது குணங்களும் கூடியே அமைச்சர் மாட்சிமைப்பட இயலும் எனில், முன்னைய குறளில் நான்கும் பின்னைய குறளில் ஐந்தும் எனக் கூட்டி னும் 9 என்னும் தொகை இயையுமன்றோ! ஆதலின் இக் கூற்றும் பொருந்துமாறில்லை.

3. மூன்றாவதாக அவர்கூறும் காரணம் இன்னும் வியப்பானதாகும். கருவியும் 'காலமும்'—என்று தொடங் கும் குறளில் ஐந்து என்னும் தொகை ஆசிரியரால் கொடுக்கப் பெறவில்லை. எனினும் வடநூலார் மந்திரத்தார்க்கு (அமைச்சர்க்கு) அங்கம் எனக் கூறப்பட்ட ஐந்துமே இக் குறளில் கூறப்பட்டிருப்பதாகக் கொள்ளவேண்டும். அவ் வைந்து என்னும் தொகையும் ஆசிரியரால் கொடுக்கப் பட்டிருத்தல் வேண்டும். எனவே "வன்கண்" என்று

தொடங்கும் குறளில் உள்ள ஐந்து என்னும் தொகையை இக்குறளிற்கு எடுத்துக் கொண்டேன் என்கின்றார் பரிமேலழகர். தன்னெஞ்சறிந்த உண்மையைக் கூறிய வகையில், நம் மகிழ்வை அவருக்குத் தெரிவித்துக் கொள்ளலாம். எனினும், தாம் விரும்பியதொரு கருத்தை நிலை நாட்ட வேண்டும் என்பதற்காக இவ்வளவு வலிந்து, ஒரு குறளிலுள்ள தொகையை இன்னொரு குறளுக்கு எடுத்துக் கொள்வதை எவ்வாற்றானும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. வடநூலாரின் கருத்தினையே, திருவள்ளுவரும் ஏற்றுச் செய்துள்ளார் என்று கூற வேண்டுமாயின், வடநூலார் தானையும் பொருளும் என விரித்துக் கூறிய இரண்டும், திருவள்ளுவர் கூறிய "கருவி" என்னும் சொல்லில் அடங்கும் எனக் கூறியிருப்பினும் தம் கருத்து நிறைவு பெற்றிருக்குமன்றோ! அங்ஙனமாகவும் பரிமேலழகர் இவ்வாறு வலிந்து பொருள் கொண்டிருப்பது குறள் போக்கிற்கும், மரபிற்கும் ஒவ்வாத தொன்றே எனத் தோன்றுகின்றது.

இனி இக்குறளுக்குப் பிறர் பிறர் கூறும் உரைகளையும், அவற்றின் நலனையும் காண்போம்.

**மணக்குடவர் :** அஞ்சாமையும், குடிகாத்தலும், இந்திரியங்களைக் காத்தலும், நூல் முகத்தானறிதலும், முயற்சியும் என்னும் ஐந்தும்கூட மாட்சிமைப்பட்டவன் அமைச்சன் ஆவான் என்பர்.

இவர் "குடிகாத்தல்" என்ற தொடருக்குக் குடி காத்தல், இந்திரியங்களைக் காத்தல் என்று இருபொருளாக உரைத்து இரண்டாக்கி, ஏனைய கூட்டி ஐந்து என்றார்.

**பரிதி :** தறுகணுண்மை, குடிகாத்தல், கல்வி, அறிவுடைமை உத்தியோகம் என்னும் அஞ்சு குணமுள்ளவன் மந்திரி என்பர்.

இவர் 'கற்றறிதல்' என்ற தொடரைக் கற்றலும், அறிதலும் எனப் பிரித்து இரண்டாக்கி ஏனைய கூட்டி ஐந்து என்றார்.

**காளிங்கர் :** வன்கண்ணதாகிய தறுகண்மையும், தன்னரசன் கோற்கீழ் வாழும் குடிகளது வன்மை மென்மை வழக்கு அறிதலும், காத்தலாகிய நாடுகாவலும், காடு காவலும், நாடிச் சொல்லுதலும், கற்றறிதல் ஆகிய பெரும் பொருள் நூல் உணர்ந்து அறிதலும், ஆள்வினை என்னும் அரசியல்

முயற்சியும் அமைச்சியல் முயற்சியும் இவை ஐந்தும் ஒரு தலைப்பட ஆராய்ந்தவன் அமைச்சன் என்பர்.

இவர் உரைப்படி ஐந்து என்பதற்கான விளக்கத்தைத் தெளிவாக அறிய இயலவில்லை. எனினும் ஐந்து என்னும் தொகைக்கு இக் குறளிலேயே விளக்கம் காண்கின்றார் என்பது மட்டும் தெளிவு.

இனித் தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் என்பார், "பிறப்பே குடிமை" என்று தொடங்கும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்திற்கு உரை கூறுங்கால், மேற்கோள் கூறும் வாயிலாக இக்குறளிற்கும் உரை தந்து போகின்றார். அவர் கூறுமாறு:- உருவு நிறுத்த காமவாயில்:- உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினன் ஆயினும், உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்து எண்ணிக் கொண்டாம் என்பது. என்னை? "வன்கண் குடிகாத்தல் கற்றறிதல்" என்புழி கற்றறிதல் என்பதனை இரண்டாக்கி ஐந்து என்பவாகலின் என்பது."

இவர் கருத்தும், பரிதியார் கருத்தும் ஒத்திருப்பதைக் காணலாம். குடிகாத்தல் என்ற தொடரைப் பிரித்துக் காண்பதைக் காட்டிலும், 'கற்றறிதல்' என்ற தொடரைப் பிரித்துக் கற்றலும், அறிதலும் எனப் பொருள் காண்பது சிறப்புடைத்து. ஆசிரியர் திருவள்ளுவனாரும் 'கல்வி' "அறிவுடைமை" எனத் தனித்தனியே பிரித்து இலக்கணம் கூறுமாற்றான் இவ்வுண்மை புலனாகும்.

எனவே "ஐந்துடன் மாண்டது அமைச்சு" என்னும் தொடருக்குப் பரிதியாரும், பேராசிரியரும் கூறுமாறு போல உரைகாண்பதே பொருத்தம் உடைத்தாகும்.

## நங் கடன்

[நாஞ்சில், திரு. கா. கணபதி]

பன்மொழி அரைகுறை கல்லாமல்
பைந்தமிழ் கசடறக் கற்பதுவே
நன்முடி பெனக்கொண் டவ்வாறே
நயமும் தெளிவும் பெறுவோமே
சொன்முடி பெல்லாந் தூய்தாகத்
துலங்கக் கற்றவர் வழிசென்று
தென்மொழி நமது தமிழ்மொழியைத்
திருந்தக் கற்பது நங்கடனே.

# தமிழும் பிறமொழித் தொடர்பும்

[திரு. மு. சதாசிவம், எம்.ஏ.,]

திராவிட மொழிகளில் தலையானதாயும், தொன்மைச் சிறப்புடையதாயும், இலக்கியவளம் செறிந்ததாயும் திகழும் தமிழ் மொழி திராவிடத் தாய்மொழியின் தனித்தன்மையைப் பெரிதும் போற்றிக் காப்பாற்றி வருகிறது. தாய்மொழியின் தூய் நிலையைக் காத்து வருதற்குத் தமிழ் முனைந்ததைப் போலப் பிற திராவிட மொழிகள் முற்படவில்லை. இலக்கியங்களைப் பெற்றுப் பண்பட்டு வளர்ந்துள்ள பிற திராவிட மொழிகளுள் கன்னடம் வடமொழிச் சொற்களைக் கடன் வாங்கிக் கொள்ளக் கூசுவதில்லை; தெலுங்கு முடிந்த அளவு மிகுதியான சொற்களைக் கடன் வாங்குவதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது; மலையாளம் வடமொழிச் சொற்களை அளவின்றிக் கடன் வாங்கிக் கொள்வதில் பெருமைப்படுவதுடன், 'வடமொழியின் வாரிசு தான் எங்கள் மலையாளம்' என்று உண்மை அறியாது கூறுவதி லும் வெட்கங் கொள்வதில்லை.

எழுத்து வழக்கில் பயிலாது, பேச்சு வழக்கில் மட்டும் பயிலப்படுவனவாயும் சிறுபான்மை மக்களால் மட்டும் பேசப்படு வனவாயும், பண்பட்டு வளராதனவுமான துளு, பிராகுவே போன்ற பிற திருந்தாத் திராவிட மொழிகள் பலவும் காலத்திற் கும் சூழ்நிலைக்கும் ஆட்பட்டுப் பிற மொழிகளின் தாக்குதல் களுக்குத் தப்ப வியலாது, அவற்றின் சொற்களையும், அம் மொழிக் கூறுகளையும் ஏற்றுக்கொண்டு வந்துள்ளன.

தமிழ் மொழியும் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக வடமொழியுடன் நண்ணிய தொடர்பு வைத்துக் கொண்டே வந்திருக்கிறது. சங்க இலக்கியங்களிலும், தொல் காப்பியத்திலும் பல வடசொற்கள் காணப்படுகின்றன. தொன் மைத் தமிழிலக்கணமாகிய தொல்காப்பியம் வடசொற்களைத் தமிழ் ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கூறி, ஏற்றுக் கொள்ளும் முறைகளையும் குறித்துப் போந்தது. வடமொழிப் பண்பாடு இடையறாது தமிழ்நாட்டில் பரப்பப்பட்டு வந்தமை யாலும், வடமொழி 'தெய்வ மொழி' என்ற கருத்தை வட மொழியாளர் வலியுறுத்தித் தங்கள் சொல்வன்மையால் அக் கருத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ளச் செய்தமையாலும், வட மொழியினின்று சொற்களைக் கடன் வாங்கிக் கொள்வது தமிழர் களால் ஒரு சிறப்பாகவே கருதப்பட்டது. வடமொழியில் உள்ள

வேதங்கள், உபநிடதங்கள், சமய நூல்கள், மெய்த்துறை நூல்கள், பற்பல அறிவியல் நூல்கள் முதலியவற்றைத் தமிழர் கற்றுக்கொள்ள முயலும்போது பல வடசொற்களின் பொருட் சிறப்பை உன்னி அவற்றைத் தமிழில் போற்றிப் பொதிந்து வைத்துக்கொள்ள முற்பட்டனர்.

நாம் 'ரேடியோ'வை வானொலி என்றும், 'ஏரோப்ளேனை' வானூர்தி என்றும் மொழி பெயர்த்து வைத்துக்கொண்டது போலவே சங்ககாலப் புலவர்கள் வடமொழிச் சொற்களைப் பெரும்பாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளாது அவற்றின் மொழி பெயர்ப்பை அமைத்துக்கொண்டனர். உத்தரம் (உத்தரக் கற்கவி) என்பதை, 'நாளொடு பெயரிய கோளமை விழுமரம்' (நெடுநல் வாடை; அஉ) என்ற தொடரானும், 'கருப்பக்கிருகம்' என்பதைக், "கருவொடு பெயரிய காண்புஇன் நல்வில்" (நெடுநல் வாடை: ககச) என்ற தொடரானும் குறித்தனர். இவ்வாறே இராமாயண, மாபாரதக் கதைக் குறிப்புக்கள் வருமிடந்தோறும் வடமொழிப் பெயர்களைப் பெரும்பாலும் நேராகக் கூறாது, செந்தமிழ்ச் சொற்களால் பொருள்களை உய்த்துணர வைத்தனர். இஃது சங்ககாலப் புலவர் நெறி.

இவ்வாறு வடமொழியில் சிறு தனிச் சொற்களாக வழங்குவனவற்றிற்கு நீண்ட தொடர்களில் பொருள் அமையச் செய்வது நாளடைவில் செயல்முறைக்குப் பெரிதும் ஒவ்வாமற் போயிருக்கலாம். இதனால் வழக்குப் பயிற்சி மிக்க வடசொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டனர். ஆனால் செய்யுட்கண் அமைக்கும்போது தமிழ் இலக்கண நெறி வழாது, தமிழ் ஒலியமைப்புக் கேற்ப அவற்றின் வரிவடிவைத் திருத்திக் கொண்டனர். இம்முறை இடைக்காலத்தில்தான் சிறிதும் போற்றப்படா தொழிந்தது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் வடமொழிச் சொற்களைக் கிரந்த எழுத்துக்களில் தமிழ்ச் சொற்களுடன் பலவகையாகக் கலந்து எழுதி 'மணிப்பிரவாள நடை'யை வளர்த்து வந்தனர். அக்காலத்தில் வடமொழியின் கை ஓங்கியிருந்தது. தமிழின் தனித்தன்மையைக் காப்பாற்றவேண்டும் என்று யாரும் கவலைப்படவில்லை. அருணகிரிநாதர் 'சந்தத் திருப்புகழ்' பாடுவதற்கு ஏற்றவாறு வடசொற்களை அப்படியே ஏற்றுக்கொண்டு பாடி அவற்றைத் தமிழ் எழுத்துக்களில் எழுதினார்; அவற்றைத் தமிழ் ஒலி முறைக்கேற்ப மாற்ற முனைந்திருப்பின் சந்தங் கெட்டு விடும் என்று கருதினார்.

பல்வேறு சிற்றிலக்கியங்களை ஆக்கிய பிற்காலப் புலவர்களும் பிறர்க்குப் புரியாத வகையில் யமகம், திரிபு, அந்தாதி, கலம்பகம்

சித்திரகவி முதலியவற்றைப் பாடுவதே சிறப்புடையதெனக் கருதி அவற்றுள் வடசொற்களை மிகுதியாக வழங்கத் தலைப்பட்டனர். எவ்வளவு மிகுதியாக வடசொற்களை வழங்குகிறோமோ அவ்வளவு ‘தமிழ்ப் புலமை மிகுதி’யுடையவராவோம் என்று அக்காலப் புலவர்கள் கருதியது போலத் தெரிகிறது. பொதுமக்களும் தங்களுக்குப் புரியாத வடமொழியை அச்சமும் வியப்பும் கொண்டு போற்றியது போலவே, வடசொற்களை மிகுத்து வழங்கிய தமிழ்ப்புலவர்களையும், “நமக்குப் புரியாத வகையில் எவ்வளவு அழகாகப் பாடியிருக்கின்றனர்!” என்று வியந்து அவர்களை அச்சத்துடன் போற்றத் தலைப்பட்டனர். இக் காலத்தில் ஆங்கிலத்தில் கல்வி பெற்றவரே தனித்தமிழ்க் கல்வி பெற்றவரினும் சிறப்புடையவர் எனப் பொதுமக்கள் கருதியதைப் போலவே, அக்காலத்தில் வடமொழிக் கல்வி பெற்றவரே அறிவு மேம்பாடு உடையவர் என்று போற்றப்பட்டதில் வியப்பு ஒன்றும் இல்லை. இதனால், பல நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டின் உயர்நிலைக் கல்வி வடமொழிக் கலப்பில் நாட்டஞ் செலுத்தி வந்திருக்கிறது என்பது எளிதில் புலப்படும்.

தமிழ் வடமொழியின் எவ்வெச் சொற்களை எவ்வெக் காலத்தில் எவ்வெக் காரணங்களால் கடன் பெற்றது என்பது வரலாற்று முறையில் விரிவாய் ஆராய்வதற்குரிய பெருஞ் செய்தியாகும்.

தமிழ் உலகத்துப் பல மொழிகளோடும் தொடர்பு கொள்ளும் வாய்ப்பைப் பெற்று வந்திருக்கிறது. பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டுடன் உரோமர், கிரேக்கர், எபிரேயர் முதலிய பிற நாட்டினர் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். கிறித்துவ சமயத்தைப் பரப்புதற்காகப் பல்வேறு வெளி நாடுகளினின்றும் போந்த பாதிரிமார்கள் தங்கள் மொழிகள் தமிழோடு உறவு கொள்ளும்படி செய்தனர். பௌத்தம், சமணம் முதலிய பிற சமயங்கள் தமிழகத்திற் புகுந்தபோது அச்சமயத்தின் நூல்களைப் பெற்றிருக்கும் பாலி, பிராக்கிருதம் போன்ற பல மொழிகள் தமிழ்நாட்டில் புகுந்தன. பல்லவர் ஆட்சிக் காலத்தில் வடமொழியும், பிராகிருதங்களும் தமிழகத்தில் வழங்கப் பெற்றன. பிற்காலச் சோழராட்சியில் தமிழ் சிறப்பிடம் பெற்றாலும், வடமொழிக்குத் தனிச்சிறப்பு அளிக்கப்பட்டே வந்தது. இராமாயணம், பாரதம், சிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை, கந்தபுராணம் முதலிய காப்பியங்கள் தமிழில் தோன்றியபோது அவற்றிற்கு மூலம் வடமொழி நூல்களானமையின், தமிழ் மொழி பெயர்ப்பாக்கத்தில் வடசொற்கள் மிகுதியாகக் கலக்கத் தலைப்பட்டன. காப்பிய காலத்தை அடுத்துச் சைவ, வைணவ சமய

சாத்திரங்கள் வளர்ந்த காலத்தில் வடமொழியிலிருந்து மெய்த்துறைகளுக்குரிய நுண்கலைச் சொற்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டன. ஏனெனில் அக்காலத்தில் இந்தியா முழுவதிலும் எச்சமயத்தினரும் மெய்த்துறையியல்களுக்குரிய நுண்சொற்களை வடமொழியினின்று பெறுவதே மரபாயிருந்தது.

முகமதியர் இந்தியாவின் முழு ஆட்சியைக் கைப்பற்றி ஆண்ட காலத்தில் தமிழ்நாட்டில் முகமதியர் மிகுதியாகப் பரவவும், வளரவும் தலைப்பட்டனர். அவர்களோடு இந்துத்தானி, அராபிக்கு, பெர்சியன் முதலிய மொழிகளும் தமிழகத்தில் குடியேறின. நாளடைவில் இவையும் தமிழோடு தொடர்பு கொள்ளமுற்பட்டன. தஞ்சையை மராட்டியர் ஆண்டபோது மராத்திமொழி தமிழகத்தில் புகுந்து வழங்கியது. விசயநகர மன்னர்களின் பேராட்கள் தமிழகத்தை ஆண்டபோது தெலுங்கு மொழி தமிழகத்தில் நன்கு மதிக்கப்பட்டது.

இந்தியாவிற்கு வாணிகம் புரியவந்த டச்சுக்காரர், போர்த்துக்கீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலியோர்கள் தமிழகத்தில் தங்க நேரிட்டதால் அவர்களுடைய மொழிகள் ஓரளவு தமிழோடு தொடர்பு கொள்ள நேர்ந்தது. பாண்டிச்சேரியில் பிரெஞ்சு ஆட்சி நிலை பெற்றதால் அங்குப் பிரெஞ்சுப் பண்பாடும் பிரெஞ்சு மொழித் தொடர்பும் கடந்த மூந்நூறு ஆண்டுகளாக நிலைத்து வந்துள்ளன.

ஆங்கிலேயர் இந்திய ஆட்சி முழுவதையும் கைப்பற்றிக் கொண்ட பிறகு இந்நாட்டில் ஆங்கிலக் கல்வியைப் புகுத்தமுற்பட்டனர்; இதனால் ஆங்கிலத்தின் செல்வாக்குத் தமிழ்நாட்டிலும் மிகுதிப்படலாயிற்று. எனினும் இந்நூற்றாண்டின் முற்பகுதிவரை வடமொழியின் செல்வாக்குச் சிறிதும் குறையவில்லை. பல தமிழர்கள் மலேயா, பர்மா, இலங்கை, பிசித்தீவு, தென்னாப்பிரிக்கா முதலிய பல இடங்களிலும் தொழில் செய்வதற்காகவும், வாணிகம் புரிவதற்காகவும் குடியேறியதாலும், மற்றும் பல தமிழர் அவர்களோடு தாயகத்திலிருந்துகொண்டே வாணிகத் தொடர்பு வைத்துக்கொண்டு வந்துள்ளமையாலும் அந்நாட்டு மொழிகளிடைத் தமிழர்க்குச் சிறிது தொடர்பு ஏற்படலாயிற்று.

கடல் கடந்து பல நாடுகளிலும் சென்று வழங்கும் முதல் இந்தியப் பேச்சுவழக்குடைய மொழி தமிழே என்பது நமக்குப் பெருமை தருவதாகும். இவ்வாறு உலகத்தின் பல மொழியினரிடமும் தொடர்பு கொண்ட தமிழர் அவர்களுடைய மொழிகளினின்று அவ்வப்போது தேவையான அளவு சொற்களைப் பெற்றி

ருத்தல் இயல்பே. அவற்றுள் பல தமிழ் மொழியால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை தமிழரின் பேச்சு மொழியிலும், எழுத்து மொழியிலும் வழங்கி வருகின்றன.

தன்னை நன்கு உணர்ந்தவனே பிறரை நன்கு உணரமுடியும். அது போலவே நம் தாய்மொழியின் இயல்புகளை நன்கு உணர்ந்த பிறகுதான் பிற மொழியின் இயல்புகள் நமக்கு நன்கு புலப்படும். பிறரிடம் சிறப்புக் கண்ட விடத்து அச்சிறப்பினைத் தலைமேல் வைத்துக் கொண்டாடும் பண்பாடு படைத்த தமிழர் அமிழ்தனைய தம் தமிழ்மொழியின் சிறப்பியல்பையும் வளத்தையும் பலகாலம் மறந்து வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆனால் சமயத்தைப் பரப்புதற்காக வந்த மேனாட்டுப் பாதிரிமார்கள் தமிழின் சிறப்பையும் பெருமையையும் உணர்ந்து, வியந்து அவற்றைத் தமிழர்க்கு உணர்த்திக் கண் விழிக்கச் செய்திருக்கின்றனர். அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் கால்டுவெல் பெருமகனவர். ஐரோப்பிய மொழிகள் பலவற்றைக் கற்றறிந்திருந்த கால்டுவெல் அவர்கள், பல்லாண்டுகள் தமிழ்நாட்டில் நிலையாகத் தங்கித் தமிழ்மொழியை ஆய்ந்தறியத் தலைப்பட்டுப் பல புதிய உண்மைகளைக் கண்டறிந்தார்.

தமிழைக் கால்டுவெல் ஆய்ந்ததைப் போலவே மலையாளத்தைக் குண்டர்ட் என்பவரும், கன்னடத்தைக் கிட்டல் என்பவரும், தெலுங்கைப் பிரௌண் என்பவரும் சென்ற நூற்றாண்டில் ஆராய்ந்து வந்தனர். இவர்களுடைய ஆராய்ச்சி நடைபெறு முன்பு திராவிட மொழிகளும், வடநாட்டு இந்தி, வங்காளம், மராத்தி, குசராத்தி, பஞ்சாபி முதலிய மொழிகளைப் போல வடமொழியினின்று பிறந்தவையே என்ற உண்மைக்கு மாறான கருத்து எல்லாராலும் நம்பப்பட்டு வந்தது. ஆனால் உண்மை காண்பதே தம் ஒரே நோக்கமாகக் கொண்டு முறை திறம்பாப் பேராராய்ச்சிகள் செய்துவந்த மேற்குறித்த மேனாட்டுப் பெருமக்கள் திராவிட மொழிகள் ஒரு தனிக் குடும்பத்தை, பிரிவைச் சேர்ந்தவையே என்றும், மொழி அடிப்படையில் வடமொழிக் குடும்பமும், திராவிட மொழிக் குடும்பமும் வெவ்வேறானவையே என்றும், வடமொழியினின்று தமிழும் பிற திராவிட மொழிகளும் பிறந்தன என்று கூறுவது அடிப்படைத் தவறு என்றும் நிலை நாட்டினர். இவ்வாறு அவர்கள் நிலை நாட்டிய இக்கருத்துக்களை ஏறக்குறைய நூறாண்டுகள் கழிந்த பின்னர் இப்போதுதான் இந்திய நாட்டு அறிஞர்கள் முழு மனதாக ஏற்றுக்கொண்டு மேற்கொண்டு ஆராய்ச்சிகள் புரிந்து வருகின்றனர். எனவே இந்திய மொழிகளுக்குள் தமிழுக்குத் தனிச்சிறப்பு விரைவில் கிடைக்கும் என்றெதிர் பார்க்கலாம்.

இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக மேலாண்மை செலுத்திய வடமொழியின் பிடிப்பை நீக்கித் தூய தமிழே வழங்கப்பெறல் வேண்டுமெனத் தனித்தமிழியக்கத்தை முதன் முதலாகத் தோற்றுவித்த பெருமை மறைத்திரு. மறைமலையடிகளாரையே சாரும். அடிகளாரும் முதற்கண் தாம் வாழ்ந்த காலத்தின் போக்கை ஒட்டி வடசொற்களை விரவியே தம் நூல்களை எழுதி வெளியிட்டு வந்தார். ஆனால் கால்டுவெல் பெருமான் அடிகளாரின் கண்களைத் திறந்து விட்டார். கால்டுவெல் அறிஞரின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலைப் படித்த பின்னர் அடிகளார் தம் காலத்தின் போக்கையே மாற்றவேண்டும் என்ற புரட்சி மனப்பான்மை கொண்டு, எதிர்ப்புக்களுக்கு அசையா உறுதி பூண்டு, தனித்தமிழ் நெறியொன்றினையே தம் வாழ்நாள் அளவும் பேச்சிலும், எழுத்திலும் மேற்கொண்டு வந்தார். அடிகளாரின் தனிப்பெரு முயற்சியால்தான் இக்காலத்தினர் தமிழின் தனித் தன்மைச் சிறப்புக்களை எளிதில் அறிந்து போற்றும் நிலையை எய்தினர் எனலாம். இவ்வாறு அடிகளாரின் மனத்துட் படிந்து புரட்சியை விளைவித்த கால்டுவெல் அறிஞரின் சொற்களை இவண் நினைவு கூர்தல் இன்றியமையாதாகும்:

"It is true it would now be difficult for Telugu to dispense with its Sanskrit: more so for Canarese; and most of all for Malayalam:—those languages having borrowed from Sanskrit so largely, and being so habituated to look up to it for help, that would be scarcely possible for them now to assert their independence. Tamil, however, the most highly cultivated *ab intra* of all Dravidian idioms, can dispense with its Sanskrit altogether, if need be, and not only stand alone, but flourish without its aid". (p. 45.)

பண்பட்ட பிற திராவிட மொழிகள் வடசொற்களை நீக்கிவிட்டுத் தனித்தன்மை பெற்று வாழ்தல் இயலாது என்றும், திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் தலையாய சிறப்பெய்தி வளம்பெற்ற தமிழ்மொழி மட்டும் விரும்பினால் வடமொழிச் சொற்கள் அனைத்தையும் நீக்கித் தனித்து இயங்க முடியும் என்றும், அவ்வாறு வடசொற்களை நீக்குவதனால் தமிழின் சிறப்புப் பெரிதும் ஏற்றம்பெற்று இலங்கும் என்றும் மேற்குறித்த சொற்றொடர்களில் கால்டுவெல் அறிஞர் குறித்துப் போந்துள்ளார். இச்சொற்கள் தனித்தமிழியக்கத்தாருக்கு (Purists) மட்டுமன்றித் தமிழ்நலம் பேணும் அனைவர்க்கும் உரிய பொன்மொழிகளாகும்.

தமிழ் என்றும் வளர்ந்துவரும் மொழி; வேர்ச்சொல் வளம் நிறைந்த மொழி. அதனால் வடமொழியே யன்றி உலகத்து எம்மொழியாயினும் அம்மொழிக்கண் உள்ள புதுக்கருத்துக் களைத் தனித்தமிழில் வெளிப்படுத்தும் சிறப்புப் பெற்றது. இவ் வுண்மையைத் தமிழர் இன்னும் முற்றும் அறிந்ததாகத் தெரிய வில்லை; அறிந்து கடைப்பிடிக்க முற்பட்டதாகவும் தெரியவில்லை. எளிதான நெறி எனக் கருதித் தேவையான பிற மொழிச் சொற் களை அப்படியே எடுத்தாள முற்படுவது மனித இயல்பே. தமிழரின் எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சு மொழியில் எத்துணை எத்துணையோ பிறமொழிச்சொற்கள் வழங்கப்படு கின்றன. பேச்சு மொழிக்கண் பிற மொழிச் சொற்களைக் கடிந்து வழங்கல் எல்லார்க்கும் எளிதில் இயலுவதொன்றன்று. அஃது திரு. தேவநேயப் பாவாணரைப் போன்ற மொழியறி ஞர்கள் பிற சொற்கலவாது பேசுதலையே கொள்கையாகக் கொண் டிருந்தால்தான் முடியும். ஆனால் தமிழின் தனித்தன்மையை இலக்கிய உலகிலாயினும் காப்பாற்றி வருதல் புலவர் பெரு மக்களின் கடனாதலின் தமிழில் வழங்கும் பிற மொழிச் சொற் களை அறிந்து கொள்ளுதலும், முடிந்த விடங்களில் எல்லாம் அவற்றை நீக்கி அவ்வவ்விடங்களில் தனித்தமிழ்ச் சொற்களைப் பெய்து வழங்குதலும் இன்றியமையாதனவாகும். பிற மொழி களினறிவும், வேர்ச்சொல்லியலாராய்ச்சி அறிவும் இல்லாத பலர் பிற மொழிச் சொற்களை அவை உருவ ஒற்றுமை அல்லது பொருள் இயைபு பெற்றுத் தமிழில் வழங்கப்படுங்கால் அவை தமிழ்ச்சொற்களேயா மெனக்கூறி அவற்றிற்குப் புதிய வேர்ப் பொருள்களைக் கூற முற்படுகின்றனர். இஃது உண்மையான வரலாற்று முறைப்படியான மொழியியலாராய்ச்சிக்குப் பொருந் தாத முறையாகும். தமிழர் பிறமொழிச் சொற்களை வழங்குங் காலத்து அவற்றை வேற்றுமொழிச் சொற்களென்று ஒப்புக் கொள்ளுவதை மறுக்கவேண்டுவதில்லை. பிறமொழிச் சொற் களுக்கு இணையான வளமான சொற்கள் தமிழ் இலக்கியங்களுள் புதைந்து கிடக்கின்றன. அவற்றிற்குப் புத்துயிர் ஊட்டி உலவ விடின் அவை புது வலிவும் வனப்பும் கொண்டு திகழும். இதற்கு, பழந்தமிழ்ப் புலவர்கள் சொல்லாக்கத்திற்கு எவ்வெம்முறை களை மேற்கொண்டனர் என்றறிதல் வேண்டும். மேலும் தமிழ் பிற மொழிகளின் தொடர்பால் எய்திய ஆக்கமும் நலிவும் அறிந்துணர்தலும் தமிழறிஞரின் இன்றியமையாக் கடனாகும்.

---

# சங்ககாலச் செய்யுள் நடை

[திரு. ச. கணபதி முதலியார், எம். ஏ., எல். டி.]

(செல்வி, சிலம்பு ௩௬, பரல் அ; ௩அ௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே ஒருநாள் உயிரினுஞ் சிறந்த நாணந்துறந்து இதனைச் செய்தேன். புனத்தயல் ஊஞ்சலிலிருந்த நான் சற்றே இவ்வூஞ் சலை ஆட்டுவாய் என்றேன். அவனும் அங்ஙனே செய்தான். அஞ்ஞான்று பழம் நழுவி மெய்யாகவே பாலில் விழுவதுபோல் கைநழுவிப் பொய்யாக அவன் மார்பில் வீழ்ந்தேன். அவன் அதனை மெய்யென்றெண்ணி என் ஆகத்தைத் தழுவினான். பின்னும் இருந்தால் பிறர் அறிவர் என்று அஞ்சி என்னைப் பிரிந் தான்; பிரிந்துழிக் கொல்வான்போல் என்னை நோக்கினான். நானும் மயங்கினேன்." இஃது குறிஞ்சிக்கலியில் ஒருகாட்சி. அப்பாட்டுப் பின்வருவது :

"கயமல ருண்கண்ணாய் காணா·யொருவன்
வயமா னடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந் தவன்வயிற்
சேயேன்மன் யானுந் துயருழப்பே னாயிடைக்
கண்ணின்று கூறுத லாற்றா னவனாயிற்
பெண்ணன் றுரைத்த மைக்காயி னின்னதூஉங்
காணான் கழிதலு முண்டென் றொருநாளென்
றோணெகிழ் புற்ற துயராற் றுணிந்ததோர்
நாணின்மை செய்தே னறுநுதா லேனல்
லினக்கிளி யாங்கடிந் தோம்பும் புனத்தய
லூசலூர்ந் தாட வொருஞான்று வந்தானை
யைய சிறிதென்னை யூக்கி யெனக்கூறத்
தையா னன்றெனன் றவனூக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தே னவன்மார்பின் வாயாச்செத்
தொய்யென வாங்கே யெடுத்தனன் கொண்டான்மேன்
மெய்யறியா தேன்போற் கிடந்தேன்மன் னாயிடை
மெய்யறிந் தேற்றெழுவே னாயின்மற் றொய்யென
வொண்குழாய் செல்கெனக் கூறி விடும்பண்பி
னங்க ணுடையனவன்" (குறிஞ்சிக்கலி—௪௩.)

மற்றொரு காட்சி அகநானூற்றின் கண்ணே உள்ளது. அதுவும் தலைவன் தலைவி ஆகிய இருவரின் முதற் சந்திப்பை வர்ணிப்பது :

"அன்னாய் வாழ்வாயாக. நின்மகள் பாலுண்ணாள், நனி மேனி பசந்தனள், என வினவா நின்றாய். அதன் தன்மையை யானும் தெளிவாய் அறியேன். ஆனால் நிகழ்ந்ததிது. முன்னொரு நாள் வேங்கை மரம் ஒன்று சோலை நடுவண் மலர்ந்து நின்றது. அம் மரத்தினடியில் நின்று மரபுப்படி வேங்கைப்பூப் பறிக்கப் 'புலி புலி' என்று கூறினோம். வேங்கை மரமும் தாழ்ந்து கொடுத்தது. 'புலி புலி' என்று கூவிய வண்ணம் மலர் பறித்தோம். அக் குரல் ஆண்டோர் விற்கலை பயின்ற ஆடவனொருவன் செவியிற்பட்டதுபோலும். அவன் உண்மையில் புலி அம்மருங்கு உண்டாங்கொல், பேதையரை அஃது அச்சுறுத்துவதும் உண்டாங்கொல்' எனப் பிழைபட வெண்ணி அறநெஞ்சுடையோனாய் எங்குழுவை அண்மினான். புலியைக் கண்டிலன்; கண்டான் மானேக்கு மடமகளிரை. அவன் தூங்குகையன், ஓங்கு நடையன்; செச்சைக் கண்ணியன்; கழுநீர் மாலைக் கழுத்தினன்; விற்கரத்தினன்; சொல் உரத்தினன்; செஞ்சாந்தணி நெஞ்சினன்; அஞ்சுவானிலன். மையீரோதி மடவீர்! நுங்கள் வாயிற் பொய்யும் உண்டாங்கொல் என வினவினன். நாங்கள் ஒருவர் முதுகோடு ஒருவர் மறைந்து நாணிக்கோணி நின்றோம். குதிரையை முடுக்குதல் தவிர்ந்த தேரனாகிய அவன் பல்கால் நும்மகளை உற்று நோக்கிச் சென்றனன். அந்திப்பொழுது வந்துழி நம்மகள் 'அவனே மகன்' என்றனள். இதுதான் முன்னைய நிகழ்ச்சி" என்றாள்.

"அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி அதன்திறம்
யானும் தெற்றென வுணரேன் மேனாள்
மலிபூஞ் சாரலென் தோழி மாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி யென்னும் பூசல் தோன்ற
ஒண்செங் கழுநீர்க் கண்போ லாயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே அவற்கண்டு

எம்முள் ளெம்முள் மெய்ம்மறை பொடுங்கி
நாணி நின்றெ னாகப் பேணி
ஐவகை வகுத்த கூந்த லாய்நுதல்
மையீ ரோதி மடவீர் நும்வாய்ப்
பொய்யு முளவோ என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேர னெதிர்மறுத்து
நின்மக ளுண்கண் பன்மா ணோக்கிச்
சென்றோன் மன்றவக் குன்றுகிழ வோனே
பகல்மா யந்திப் படுசுட ரமையத்து
அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்
அதனள வுண்டுகோள் மதிவல் லோர்க்கே. (அகம் - சஅ)

இவ்விருகாட்சிகளும் தோழி அறத்தொடு நிற்றல் என்ற துறையின் கண்ணது என்பது ஈண்டுக் குறிக் கொளற்பாற்று.

இங்ஙனம் பிறரொருவரும் அறியாவண்ணம் உள்ளங்கரந்த காதலராய்க் களவிற் கூடிப் பிரிந்துவந்த தலைவன் ஒருகால் பேசாக்கடலும், சிறுமீன் போக வரும் பெருமீனை நோக்கி வாடியிருந்த நாரையும், மரமுந்தான் 'அறிகரி' என்று பிழைபட எண்ணி அவனை 'அறியேன் என மறுத்துரைக்கின் அறங்கூற வையத்தார் அவன் தலையில் நீற்றைப் பெய்வர் என்பதற்கும், அவன் நிழல்பட்ட மரக்கிளை வாடி எரிந்து விடும் என்பதற்கும்'

"கரும்பமல் படப்பை பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய
அறனி லாளன் அறியே னென்ற
திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசா லவையத்து ஆர்ப்பினும் பெரிதே." (அகம் - உருசு)

"மறைப்பவுங்
கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
எரிபொத்தி யென்னெஞ்சஞ் சுடுமாயி னெவன் செய்கோ"
(பாலைக்கலி - செ. ௩௪)

என்ற அகநானூற்றுப் பாட்டும், கலித்தொகைப்பாட்டும், மற்றும் பின்வரும் பாட்டுக்களும் சான்றுதல் காண்க. தலைவன் தலைவியை மணந்த இடம் கடற்கரைப்பக்க மென்பதற்கும், தலைவியோடு இன்புற்றிருந்த இடத்தில் குருகு ஒன்று தான் இருந்தது என்பதற்கும்,

"தோள் புதி துண்ட ஞான்றைச்
சூளும் பொய்யோ கடலறி கரியே"

என்ற அகத்துறைச் செய்யுளும்.

"யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே"

என்ற குறுந்தொகை உசு ஆவது செய்யுளும் எடுத்துக் காட்டா வதுங் காண்க.

தலைமகட்குத் தலைவனூரே தன்னூரைக் காட்டிலும் எழி லுடைய தென்பதையும் தலைவனூறைபதி நுகர்ச்சிப் பொருள்களே சாலவும் சிறந்தவை என்பதையும் ஒரு தலைவி வாக்கானே அறிதல் கூடும். உடன் போய் மீண்ட தலைமகளிடம் தோழி நின் தலைவனூர் நீர் நன்னீரல்லவே, எங்ஙனம் அந்நீரை நுகர்ந் தாய் என்று வினவியதற்கு அவள் இறுத்த விடை மேற்குறித்த கருத்துக்களை நன்கு விளக்குவதாகும். "அன்னாய் வாழி; நமது தோட்டத்தின் கணுள்ள தேன்கலந்த பால் போன் றினிமையையுடைய நன்னீரைக் காட்டிலும் எம்தலைவர் ஊரி லுள்ள தழை மூடிய கிணற்று அடியில் மானுண்டெஞ்சிய கலங்கல் நீர் மிகவும் சுவையுடைத்து."

"அன்னாய் வாழிவேண்டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட்
டுவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலிழி நீரே."　　(ஐங்குறுநூறு - குறிஞ்சி - ந)

"இக்கூற்று நனிசிந்தித்தற்குரியது. நமது தோட்டத்தின் நீர்ச் தெளிவினையுடையது; தேனும் பாலும் கலந்தாற் போன்ற இனிமையையுடையது. எனினும் அந்நீர் எந்தலைவனூர்க் கிணற்று நீர்ச் சுவைக்கு எவ்வாற்றானும் ஒப்பாதலில்லை. அக் கிணற்றுநீர் தானும் பொங்கித்ததும்பிக் கிணறு முற்றிலும் நிறைந்து நிற்கும் நீருமன்று; ஒருசிறிது கிணற்றடியில் காணப்படும் கலங்கல் நீர்; தெளிவிலா நீர்; மான் துளக்கியநீர்; அது உண்டு எஞ்சிய எச்சில் நீர். அந்நீர் அமிழ்தினுமினிய நீராயிற்று எமக்கு என்று கூறுவாளாயின் தலைவன் ஊரின் மீதும் அவனூர் உள்ள பொருள்கள் மீதும் தலைவிக்கு எத்துணைப் பற்றிருத்தல் வேண்டும். இப்பற்று அவட்கு எங்ஙனம் பிறந்தது? தலைவன் மீதுள்ள பேரன்பின் பயனாய் விளைந்திருத்தல் வேண்டுமென்று கூறுவதே

சாலும். திருமணம் நிகழா முன்னர்த் தன்னைப் பயந்தோரே அவட்குப்பற்றுக்கோடு. அவர்களது ஊரே சிறந்த இன்பம் பயப்பதாய் இருந்தது. திருமணம் நிகழ்ந்த பின்றை அவட்குத் தலைவனே பற்றுக்கோடு; அவன் பிறந்த ஊரே சாலவும் சிறந்ததாய் விளங்கிற்று. தலைவனின்பமே தனதின்பம். கூரைவீடே யாயினும் அதுவே அவட்கு மாளிகை; அவனோடு ஆங்கு உறைதலே பேரின்பமாம்; கூழேயாயினும் குளித்து அவனோடு உண்டலே தலைமகட்கு உரிய சீரிய பண்பாகும். இவ் விழுமிய கருத்துக்களை யெல்லாம் அவளது விடை நினைப்பூட்டுகின்றது. நிற்க,

இத்துணைப் பேரன்புபூண்ட தலைவியின் தனிக்குடித்தனம் எப்பெற்றித்தாய் அமைந்திருக்கும் என்று எண்ணவும் வேண்டுமோ? செம்மை சான்ற நல்லற வாழ்க்கையாகத்தானே அமைந்திருத்தல் கூடும்?

அவள் பிறர் துணைகொண்டு சமையல் செய்யாள். அட்டில் தொழில் வன்மையுடையவளாய் இருப்பாள்; தானே அட்டில் கட்டில் புகுவாள். அறுசுவை யுண்டியை நறுமணந்தோன்றச் சமைப்பாள்; தலை மகனுக்குப் படைப்பாள்; உடனிருந்து ஊட்டுவாள்; தலைவன் உவந்து உண்டலைக் கண்டு உவகை பூப்பாள். அவள் என்ஞான்றும் எக்காரணங் கொண்டும் பிற பணிப் பெண்கள் கொண்டு அட்டில் தொழில் செய்யாள். பணியாளர்கள் சமையல் செய்வதும் அவர்கள் படைக்க உண்பதும் வெள்ளைத் துரை மகனரின் நவநாகரீக வழக்கம். வெள்ளைத் துரைக்கு வெள்ளைச் சட்டையணிந்த கறுப்புத்துரை சமையல் செய்வான். அவன் அழுக்குக் கொள்கலம், பிண்டம்; அவன் நீராடியதுண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு. இத்துரைமகனரின் வழக்கம் இஞ்ஞான்று தமிழகத்திலும் மெல்ல மெல்லப் புகுந்துவிட்டது. நனி நாகரிகத் தமிழர் சிலர் இவ்வழக்கத்தைப் பின்பற்றியுள்ளனர். அவர்களின் இல்லங்கள் உண்டிச் சாலைகளாக மாறிவிட்டன. உணவுச் சாலைகளில் பணியாளர் அமுது படைப்பர்; ஆண்டு அன்பிரா; பண்டங்களும் சுவை மிகுந்திரா; வாணிபமே நடாத்துநரின் குறிக்கோள். ஆண்டு ஏதிலார் போல உணவு வழங்கப்படும். உண்பார் ஊமையராய்ச் செவிடராய் உண்டு வருதல் இயல்பு. ஆனல் பண்டைத் தமிழர்களின் இல்லற நெறி அன்பின் அடிப்படையில் அமைக்கப்பெற்றது. இன்பத்திலும் துன்பத்திலும் காதலிருவரும் செம்பாதி கொள்வர். இன்பத்தியல் கூறிய நல்லிலக்கணங் கொண்ட பெண் நல்லாள் ஒருத்தியின் புதுமனை வாழ்வு குறுந்தொகையில் வருணிக்கப் பெற்றுள்ளது. அப்பெண் அணங்கு தலைமகனுக்கு மோர்க் குழம்

பாக்கிப் படைத்தாள். அதனைச் செவிலித்தாய் நேரில் கண்டு இன்புற்றாள். நற்றாய்க்கு அவர்களின் வாழ்க்கை நலத்தை ஒரு செய்யுளின் வாயிலாய்ப் படம் பிடித்துக் காட்டுவது போல் காட்டுகின்றாள். அவ்வருமைப் பாட்டின் கருத்துக்கள் பின் வருவன ;

"நன்றாகக் காய்ச்சப் பட்டதால் நன்கு இறுகிய பாறைபடு தயிரைக் காந்தள் மலர் போன்ற மெல்லிய விரலால் பிசைந்தாள். தயிரேறிய தன் கையைத் தன்னுடையில் துடைத்தாள்; மாசு படிந்த தூசை அகற்றினாளவள். அடுப்பேற்றினாள்; தீம்புளிப் பாகரைத் தாளிதம் செய்தாள். அக்காலத்துக் குவளை மலர் போன்ற மையுண்ட அவள் கண்களில் தாளிதப் புகைபட்டது. அதனை ஒரு சிறிதும் கருதினாளில்லை. குழம்பின் பக்குவ நிலையையே பெரிதும் உன்னினாள். பின் தலைவனுக்கு அதனை இட்டாள். அவனும் சுவை மிகுந்திருத்தலின் வேணவாவோடு இனிது அயின்றனன். அதனைக் கண்ட தலைவியின் அகமகிழ்ச்சி சிறிய புன் முறுவலாலும் முகமலர்ச்சியாலும் வெளிப்பட்டது." இதனைச் செவிலித்தாய் கண்டாள். நற்றாய்க்கு அவர்களது இல்லற மாண்பை எடுத்துக் கூறினாள்.

" முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே."

(குறுந்தொகை - ௧௬௭)

இச்செய்யுளின்கண் பொதிந்துள்ள நுட்பங்கள் பல. தலைவியே அட்டிற்றொழில் செய்தாள்; மோர்க்குழம்பினைப் பக்குவஞ் செய்தாள். அவளது எண்ணமெல்லாம் குழம்பின் குன்றாச் சுவையிலேயே ஊன்றியிருந்தது. தாளிதம் பருவமறிந்து செய்தல் வேண்டும். மோர்க் குழம்பின் தாளிதம் தவறினால் குழம்பின் சுவை முற்றிலும் குன்றிவிடும். எனவே அது குறையாத நிலையையே கருத்தாகக் கொண்டாள் தாளிதப் புகை மெல்லிய தன் கண்களில் படினும் அதனைப் பொருட்படுத்தினாளில்லை. தன்னால் செய்யப்பட்ட குழம்பு தலைவனுடைய உண்டற் சுவையை மிகுதிப்படுத்தல் வேண்டும். அவன் இன்பமே தன் இன்பம். அவனும் இனிதென உண்டான்; இவளும் உவகை கொண்டாள். ஆனால் தன் மகிழ்ச்சியை அறிவிலா மற்றைய பெண்டிர் போல் வெளிப்படக் காட்டினாளில்லை.

அங்ஙனம் செய்யின் மாதர் ஒழுக்கத்திற்கு இழுக்காம். எனவே தன்னுள் மகிழ்ச்சியைப் புன்முறுவலால் காட்டிக் கணவனின் தகவுரையை ஏற்றுக்கொண்டாள்.

சங்ககாலச் செய்யுளின் அகப்பொருளின் பொருள் போக்கு நெறியைச் சில உதாரணங்களால் இதுகாறும் கூறினோம். இனிப் புறப் பொருளின் பொருள் போக்கு முறையைச் சிறிது சுட்டுவாம்.

புறப்பொருள் அரசர்களின் அல்லது வள்ளல்களின் படைத் திறம், கொடைத்திறம், ஆட்சித்திறம் முதலியன பற்றி நுவலும். நானூறு பாக்களைக் கொண்ட புறநானூறே இத்துறைகளடங்கிய சீரிய நூலாம். புறநானூற்றில் கடைச்சங்க காலத்துப் புலவர் களின் படைமடம், கொடைமடம், குடியோம்பும் வகை முதலியன இரவலர்களால் நன்கு எடுத்துப் பாடப்பெற்றுள்ளன. கொடை மடம் என்பது கொடுப்பதில் அறியாமை. இல்லை என்றுரைப் பார்க்கு இல்லை என்று உரையா இதயம் படைத்தவர்களே கொடைமடம் படுவர். ஈயென இரந்தார் எவரேயாயினும், எக் காலத்திலும் எதனைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாது ஈத்துவக்கும் இன்பம் காண்பாரே கொடையில் அறியாமை உடையவர். இஞ்சி தின்ற வெஞ்சினக் குரங்கென நாய் போல் குரைத்து, பேய் போல் குனித்து, கல்லெறிந்தாலென வல்லுரை கூறுது ஈதலே ஈரநெஞ்சுடையாரது பண்பாம். இப்பாதுகாவாத ஈகையே "ஓம்பா ஈகை" எனப்படும். படைமடம் என்பது வீரரல்லாதார் மேலும் புறமுதுகிட்டு ஓடுவார் மேலும், புண் பட்டார் மேலும் மூத்தார் இளையார் மேலும் போர் செய்யாமை. கடைச் சங்க காலத்துப் பெருந்தகையாளருள் சாவா மருந்தாகிய நெல்லிக்கனியை ஒளவைக் கீந்து உயிர் நீத்த அதிகமானும், முல்லைக்குத் தேரீந்த வள்ளற்றலைவன் பாரியும், கான மஞ்ஞைக் குக் கலிங்கம் நல்கிய பேகனும், தன் தலையைக் கொய்ய வாளீந்த குமணனும் கொடைமடம் பட்ட சிலராவர். படைமடம் படாது தம் வலிமையினுல் தம்மினும் மிக்காரோடு பொருது மாண்ட பேரரசரும் பலருளர். கரிகாற் சோழன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் முதலி யோர் தம்மினும் ஒப்பாரோடும் மிக்காரோடும் போர் செய்தனர். அதிகமான் நெடுமானஞ்சி, மலையமான் திருமுடிக்காரி, பாரி முதலியோரும் களம்புக்கு, அடுபோர் செய்து வலியோரால் படைத்திறத்தாலும், போர் முறைச் சூழ்ச்சித் திறத்தாலும் வெல்லப்பட்டோராவர்; கொல்லப்பட்டோராவர். சேரன் செங் குட்டுவன் தம்மினும் எளியார் மெலியாரைத் தத்தம் அரண் புகுந்து தப்புமாறு விடுத்தனன். வீரம் செறிந்த அரசராயினுர்

நடுங்க அடுபோர் தொடுத்தான். அவன் சடையினரிடத்தும், காவி உடையினரிடத்தும், சாம்பற் பூச்சினர் பாலும், பெரும் நோன்பினர் கண்ணும், பாடுநரிடத்தும், ஆடுநரிடத்தும், புலவர் மாட்டும் போர் செய்து படைமடம் பட்டானல்லன். ஆனால் செங்கோலோச்சும் நாற்படையினரிடத்து வாளோச்சிக்கொன்று வாள் ஏர் உழவனாகத் திகழ்ந்தான்.

> " சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்
> பிடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
> பாடு பாணியர் பல்லியத் தோளினர்
> ஆடு கூத்த ராகி யெங்கணு
> மேந்துவா ளொழிய..........................
> கச்சை யானைக் காவலர் நடுங்க
> அதரி திரித்த வாளோர் உழவன் "

என்ற சிலப்பதிகார வடிகள் இக்கருத்துக்களை வலியுறுத்துவன காணக. பாரி கொடைமடம் படுபவன். ஆனால் படைமடம் படுபவனல்லன். பாரியின் பறம்பினை மூவேந்தரும் சுற்றி வளைத்துப் போர் செய்யுங்கால் கபிலர் அவர்கட்கு அவனது படைமடம் படாத்தன்மையை எடுத்துரைக்கின்றார். நீங்கள் மூவரும் அவனைப் போரால் வெல்லுதலோ அரிதினும் அரிது. அவன் போரிற் புலி; அஞ்சாநெஞ்சம் படைத்தவன். உங்களது யானைப் படையாயினும், தேர்ப் படையாயினும், வாட்படையாயினும் அவனை முறியடித்தல் முடியாதது. அவன் மலையைப் பல்லாண்டுகள் முற்றுகையிட்டாலும் பயனின்று. அம்மலை உழவர்களால் விளைவிக்கக் கூடாத நான்கு விளைவுகளை உடைத்து. அவன் நெல்லையுடையவன், பழத்தினையுடையவன், கிழங்கினையுடையவன், தேனினையுடையவன், நீரினையுடையவன். மூங்கில் எஞ்ஞான்றும் உணவைத் தரும்; பலா என்றும் இனிய கனியைக் கொடுக்கும்; வள்ளிக்கொடி தவறாது யாண்டும் கிழங்கை நல்கும்; குன்றுதேன் தருதலில் என்றும் குன்றாது; வானத்தில் மீன்களென மலையிடத்துள்ள சுனைகள் நீர் சுரந்து ஊட்டும். எனவே வெளியிடத்து உணவுப் பொருள்கள் என்றும் அவனுக்கு வேண்டுவனின்று. அன்றியும் அவனுக்குப் போரில்லா நாள் பிறவா நாளாகும்; போரெனின் கிளர்ந்தெழு தோளினையுடையவன். நீங்கள் படைத் திறத்தால் அவனை வெல்லுதல் பகற்கனவு. அவன் படைமடம் படான். ஆனால் கொடைமடம் படுவான். நீங்கள் சிறிய யாழ் கொண்டு விறலியர்களோடு பாடியும் ஆடியும் சென்று இரப்பீர்களாயின் அவன் உங்கட்கு நாட்டையும் குன்றையும் ஒருங்கே ஈவான். இக்கருத்துக்களை அகத்துள்ளடக்கிய கீழ்வரும் புறநானூற்றுச் செய்யுளைச் சிந்தியுங்கள்.


" அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்குடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவன துகொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே " (புறம்—109)

நிற்க, கொடைத் திறத்திற்குப் பிறிதொரு சான்றும் தருதும். பண்ணன் என்பான் சிறுநாடு புரக்கும் சிற்றரசன். ஆனால் வள்ளற் குன்று; இரவலர் தந்தை. ஒருநாள் செலினும் பலநாள் பலரொடு செலினும் தலைநாட் கொண்ட விருப்பொடு இரவலர்க்கு வாரி வழங்கும் பண்பு மிக்கோன். அவன்பால் புலவர்கள்,


" நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும் "

வறிதே வருகுவரல்லர். அவன் புகழ் சோழவரசச் செம்மல் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் செவிப்புலத்திற்கு எட்டியது. அவன் கைவண்மையைப் புகழ்கின்றான். பாணர்களை நோக்கிச் சொல்வது போல் சொல்லுகின்றான். "யான் உயிர் வாழு நாளையும் பெற்றுப் பாணன் வாழ்வானாக. புது வருவாயை யுடைய பழுத்த மரத்தின் கண்ணே புள்ளின மொலித்தாற் போன்ற ஊணொலி கேட்கும்; காலந்தப்பாத மழை பெய்யுங் காலத்தைப் பார்த்துத் தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தினையடையும் மிகச்சிறிய எறும்பினது சிலவாகிய ஒழுக்கத்தை யொப்பச் சோறுடைக் கையினராய் வேறு வேறு போகின்ற பெரிய சுற்றத்தோடுங் கூடிய பிள்ளைகளைக் காண்பேம்; கண்டு வைத்தும் பசி வருத்தத்தானும், வழிவந்த வருத்தத் தானும் பின்னரும் பின்னரும் கேளா நின்றேம்.

(தொடரும்)



சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர். சதாசிவம் அவர்கள் வளமனையின்கண் அமைந்துள்ள வழிபாட்டுத் திருமுருகன் திருவுரு



அருட்கவி சேதுராமன் அவர்கள், திருமுருகன் திருமுன்னின்று அருட்பெருந்தலால் திருப்பாட்டுப் பாடுதல்

# அருட்புகழ்

## [அருட்கவி சேதுராமன் அவர்கள் பாடியது.]

29—4—62 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குக் கீழ்ப்பாக்கம், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர். சதாசிவம் அவர்கள் இல்லத்தின் முன்கூடத்தில் பிள்ளையார் திருவுருவமும், முருகன் திருவுருவமும், அம்மை அம்பலவாணர் திருவுருவப்படமும் அமைக்கப்பெற்று, இரு வெண்கலக் குத்துவிளக்குகளும், இரு வெள்ளிக் குத்துவிளக்குகளும் ஏற்றி வைக்கப் பெற்றிருந்தன. அருட்கவி சேதுராமன் அவர்கள் முறையாக இறைவழிபாடாற்றி 8-25 மணிக்கு நின்றபடியே பண்ணோடு பாடத்தொடங்கி 11-50 மணிக்கு முடித்தனர்.

அவர்கள் பாடும்போது அவர்கள் தமையனார் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கையேடு வைத்து அப்பாடல்களை எழுதி வந்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு உயர்நீதிமன்ற நீதிபதி சு. கணபதியா பிள்ளை, நீதிபதி மா. அனந்தநாராயணன், ஐ. சி. எஸ்., சென்னை மாநிலக் குற்ற வழக்குமன்ற முதன்மை நடுவர் பி. எஸ். சோமசுந்தரம், டாக்டர் எஸ். ஜி. மணவாளராமானுஜம், அரசு அலுவலர் அமர்த்து குழுவின் தலைவர் வி. இரத்தின முதலியார், சவுந்தரம் கைலாசம் அம்மையார் முதலியோர் வந்திருந்தனர்.

### I. விநாயகர் துதி

**இந்தோள ராகம்]** சந்தப்பா **[ஆதி தாளம்**

அருட்குறி எது ?

*தய்ய தனதனத் தனதான*

உள்ளை யுறுதுபொற் றளியாயான்—
உய்யவும் ஆதரித் துறைவாயோ?
கொள்ளை கொளாளளைக் கழலோடே—
கொள்ள நிறுதருட் குறியேதோ;
தள்ளை சதாசிவற் கொருபாகத்—
தையல் பிளாய்! குகற் கினியோனே;
வெள்ளை மதாவளத் தவன்மால்தாழ்—
வெள்ளி விநாயகப் பெருமாளே.

குறிப்பு: உள்ளை - (என்) உள்ளத்தை. தளி-கோயில். கொள்ளை கொளா - கொள்ளை கொண்டு. தள்ளை - தாய். மதாவளம் - யானை. வெள்ளை மதாவளத்தவன்-இந்திரன். மால் - திருமால். தாழ்-தாழ்ந்து வணங்குகின்ற. வெள்ளிவிநாயகப் பெருமாள் - பாடுகையில் திருமுன் பிருந்த வெள்ளிப் பிள்ளையாரைக் குறிக்கும் போலும்.

---

* இந்நாளிற் பாடிய 31 பாக்களுள், சதாசிவன் என்று வருமிடங்களும், சிவகாமி என்று வருமிடங்களும், முறையே நீதிபதி சதாசிவம் அவர்களது திருப்பெயரையும், அவர் தங்கையார் சிவகாமியம்மையார் திருப்பெயரையும் நினைவூட்டுகின்றமை கவனிக்கற்பாலது.

## II. முருகவேள் துதி

காம்போதி ராகம்] சந்தப்பா [ஆதி தாளம்

ஆட்கொள்ள வருவாய்

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன தனதான

சரண மாகிய தாமரை நாடொறும்
வழிப டாதுழல் நாயனை ஞானியர்
தமது சூழலி லேபுகு தாமுழு மதிமூடத்—
தமிய னேனையும் நீகுரு வாயொரு
புகல்சொ லாஅணை யாஅருள் கூர்வது
தகுதி யேஇது நீபிற காய்வது புரிவாயே;
அரண தாகவுன் வார்கழல் பேணுவர்
அடிய ராரவ ரோடுரை யாடுதல்
அவச மாயுட னாடுதல் பாடுதல் அறியேனை—
அளவி லாததொர் பேறெய்து மாசெய்து
கருணை கூர்வது வேயற மாமிதை
அறிகி லாய்கொலொர் நீயுட னாளவும் வருவாயே;
கரண காரிய காரண மாகிய
கடவு ளே!கரு ணாகர னே!ஒரு
கலபி மேல்வரு வோய்! சர ணாயுத! கதிர்வேலா—
கமல னோடரி காணவொ ணாதவர்
நிமல மேனிய ரான சதாசிவர்
கயிலை யாளியொர் காதுப தேசம தறைவோனே!
மரண மாயையி லாநிச மோனியர்
மனதி லேவினை யாடழ கா!திரு
வரத ராசனென் மால்மரு கா!திரு மருகேசா—
வதன வாரிஜம் ஆறுடை யாய்!வளர்
பனிரு தோளுடை யாயிரு மாதொடு
மகிழ்வில் வாழ்முரு கா!அம ரேசர்கள் பெருமாளே. (1)

குறிப்பு: சரணம்-திருவடி. சொலா அணையா-சொல்லி அணைத்து. ஆய்வது-ஆராய்வது. அரண்-பாதுகாப்பு. அவசம் - தன்வயமிழத்தல். எய்துமா-(பேறு) எய்துமாறு. கரணம் - கருவி. கலபி-மயில். சரணாயுத - காலாயுதமெனும் கோழிக் கொடியோனே. திருமருகேசா-இலக்குமிக்கு மருமகனே. வதனவாரிஜம் - திருமுகத்தாமரை. இருமாது - தேவசேனை, வள்ளி, அமரேசர்கள் - தேவேந்திரர்கள்; "நூறுகோடி பிரமர்கள் நொந்தினர், ஆறு கோடி நாராயண ரங்ஙனே, ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்"-(அப்பர், தி. ௪00-௩,) ஆதலின் அமரேசர்கள் எனப் பட்டனர்.

**நாதநாமக்கிரியை]** [ஆதி

### அருள்புரி திருநாள் உண்டோ?

**தந்த தானன தனதன தனதன**
**தந்த தானன தனதன தனதன**
**தந்த தானன தனதன தனதன　　தனதான**

**கஞ்ச நேர்மன அடியவர் எளியவர்**
**நெஞ்ச மேதளி யெனமகிழ் இளையவ!**
**கங்குல் நீள்பகல் இருவகை இடருமில்　　வெளியூடே—**
**கண்டு நாடக மிடுபவர் புனலணி**
**சந்த்ர சேகரர் உழைவிழை கரதலர்**
**கஞ்ச னேடரி அரிபணி அடியவர்　　குருநாதா;**
**'அஞ்சல் நீயென தடியவ!' எனவொரு**
**செஞ்சொல் வாய்மலர் தரவரு மொருதினம்**
**அன்று தானுயர் தினமென மகிழுவன்　　அடிநாயேன்—**
**அந்த காரமொ டிருவினை பொடிபட**
**வந்த காரிய சனனமு மரணமும்**
**அண்டி டாதினி அருள்புரி வதுமொரு　　திருநாளே;**
**மஞ்ச னே!மலை மகளொரு புறமுறை**
**எஞ்ச தாசிவன் அரன்மடி மிசைவளர்**
**மைந்த னே!குறு முநிபர விய அறு　　முகவேளே—**
**மன்றி லாடிய ருணகிரி முனிதொழ**
**அன்று நீதரி சனைதரு வதுமிவண்**
**வந்து தானருள் செயஇனி நினைவுகொல்　　மயில்வீரா;**
**தஞ்ச நீயென அமரர்கள் துதிசெய**
**அன்று போரிடை அசுரனை யமர்செய்து**
**சண்ட வேல்கொடு பொருமொரு திறலுடை　　வடிவாளா-**
**சம்ப ராரியர் பலரினும் அழகிய**
**எம்பி ரானிரு மனைவிய ரிடையமர்**
**தம்பி ரானென வழிபடு முனிவர்கள்　　பெருமானே. (2)**

குறிப்பு: கஞ்சம் - தாமரை. கங்குல்-இரவு. கங்குல்......வெளி= "இராப்பகல் அற்ற இடம்"-கந்தரலங்காரம்; "இரவுபகலற்ற இடம்"-வேடிச்சி காவலன் வகுப்பு. உழை - மான். கஞ்சன் - பிரமன். அரி - திருமால். அரி - இந்திரன். அடியவர் - திருவடியையுடையவர். அந்தகாரம்-(அஞ்ஞான) இருள். இருவினை - நல்வினை, தீவினை. மஞ்சன் - அழகன்: வலிமையாளன். குறுமுனி - அகத்தியர். அருணகிரி முனிதொழ அன்று மன்றில் ஆடி நீ தரிசனைதருவதும் - நடராஜப்பிரானே முருகவேள்போல் நடனஞ் செய்து நிர்த்ததரிசனம் அருணகிரியார்க்குத் தந்தார் என்பது சிதம்பரத் திருப்புகழ்களால் விளங்கும். "தூய அம்பல லீலா நமோ நம"; "திரிபுரமெரிசெய்த கோவே நமோநம; தெரிசன பரகதியானாய் நமோநம"-திருப்புகழ்கள். தஞ்சம்-அடைக்கலம். சண்டவேல் - உக்ரவேல். சம்பராரியர்-மன்மதர்கள். வள்ளி, தெய்வானை

இவரிருவருக்கிடையில் முருகவேள் இருக்கும் படத்தின் முன்பு பாடப்பட்டதால் 'இருமனைவியரிடையமர்' என்ற குறிப்பு கருதத்தக்கது.

ஆரபி] [ஆதி

ஆட்கொள்ள

தத்தனா தத்ததன தானனா தத்ததன
தத்தனா தத்ததன தானனா தத்ததன
தத்தனா தத்ததன தானனா தத்ததன தனதான

வெற்றிவேல் பெற்றவொரு வீரனே கட்டழக!
கொற்றவா! பற்றைவிடும் ஞாநிமார் பக்கலுறை
வித்தகா! வெட்சிபுனை வேதியா! குக்குடம துடையோனே—
வெப்புநோய் பற்றுநெடு மாறனார் அப்பிணியை
விட்டுவாழ் வுற்றுமகிழ் கூரவே மெய்ப்பொடியை
மெத்தவே மெய்க்கணணி பூசியே தொட்டருளும் இளையோனே;
கொற்றியா முத்தநகை மாதராள் குற்றமிலி
கொட்டநீ டுற்றகுழல் மானனாள் சத்திசிவை
கொட்டியா டப்பரொரு பால்மினாள் கொச்சைவய
முடையாள்சேய்!
கொக்கெனா அச்சமரில் நீடுபோய் நிற்குமொரு
துட்டனாம் நெட்டவுணன் மாளவே சத்திவிடு
கொற்றவா! குப்பைமல வாழ்விலே பட்டுழலும் எனையாள்வாய்;
நெற்றியூ டக்கினியை ஏவியே சித்தசனை
அற்றைநாள் பொட்டெழவை நேர்மையார் பொற்சபையில்
நிர்த்தமே நித்தமிடு நீர்மையார் பெற்றவொரு மதலாயே!
நித்தியா! சத்தியர்கள் நேயனே! சத்வகுண
புத்தியார் சித்தமுறை யோகனே! அத்துவித
நிர்க்குணா! முத்தமிழி னேசனே! நெய்த்தஅயி லுடையோனே!
பற்றிலா மெய்த்தவர்கள் பாடுமோர் பெற்றியுடை
முத்தனே! மைக்கடவு மோகனே! மற்றுவழி
பட்டுவாழ் பக்தபரி பாலனே! பச்சைமயில் அனசாயற்—
பச்சைமா பத்திநியோர் பாகனே! கற்புடைய
கற்பகா னத்தரசி போகனே! நெற்றியணி
பட்டைநீ றிட்டசிவ ரூபனே! சித்தர்தொழு பெருமாளே. (3)

குறிப்பு: கொற்றவா - வலிமையுடையவனே! வெட்சி - ஒருவகைப் பூ. குக்குடம் - கோழிக்கொடி. நெடுமாறனார் - நின்றசீர் நெடுமாற நாயனார். பொடி - திருநீறு. மெய்க்கண் - உடலில். இளையோன் - சம்பந்தர். கொற்றி - பார்வதி. முத்தநகை மாதராள் - முத்தார் நகையம்மை; திருவாமாத்தூர்த் தேவியார் திருநாமம். கொட்டம் - நறுமணம். கொட்டி - சிவபிரான் செய்த நடனங்களுள் ஒன்று. 'கொட்டியாடினர்' - திருப்புகழ் (பேரூர்). கொச்சைவயம் உடையாள் - சீகாழித் திருநிலை

நாயகி. கொக்கு - மாமரம். அவுணன் - சூரபத்மாசுரன். சத்தி - வேலாயுதம். கொற்றவா - வெற்றியாளனே! சித்தஜன் - மன்மதன். அற்றை நாள் - முன்பு ஒருநாள். பொட்டெழ - பொடிபட. நெய்த்த அயில் - நெய் பூசப்பட்ட வேல். பெற்றி - பெருந்தன்மை. மை - ஆட்டுக்கடா வாகனத்தை. கடவும் - செலுத்தும். அ(ன்)ன = போன்ற. பச்சைமா பத்திநி - பச்சைநிற லக்ஷ்மியாம் பத்திநிப் பெண்; வள்ளி. கற்ப கானம் - கற்பகக் காடு. கற்புடைய......அரசி—தேவசேனையம்மை; "மறுவில் கற்பின் வாணுதல்"—திருமுருகாற்றுப்படை.

காவடிச்சிந்து மெட்டு] [ஆதி

## அஞ்சலென வந்தருள

தந்த னந்த னந்த னந்த தந்த னந்த னந்த னந்த
தந்த னந்த னந்த னந்த தனதான

கந்த முங்க லந்து கொஞ்சு வண்டி னம்ப யின்றி சைந்த
கஞ்ச முங்க டம்பு மென்றும் அணிவோனே—
கங்கை மங்கை மைந்த! கந்த! சங்கை யன்றி ருந்த தொன்று
கண்டு கொண்டு விண்ட எங்கள் குணியானாய்;
அந்த முந்த ழைந்தி லங்கும் எந்தை சம்பு பங்க மர்ந்த
அம்பை தந்த குந்த வென்றி வடிவேலா—
அஞ்ச லஞ்ச லஞ்ச லென்று தஞ்ச மென்று வந்த என்றன்
அஞ்சு நெஞ்ச வஞ்ச மங்க வருவாயே;
பந்த னென்று சண்பை வந்து சந்த மிஞ்சு மின்சொல் தங்கு
பண்கள் நன்கு முன்ப கர்ந்த மணிவாயா—
பண்டை என்பி னின்று முன்பு பெண்து லங்க அஞ்சொல்கொஞ்சு
பஞ்சு மஞ்சு றுஞ்சி வந்த பதநேயா;
நந்த நம்பி தொண்டு கண்டு நன்கி ரங்கி அன்பு வந்த
நம்பர் கம்பர் எம்ப ரன்றன் இருகாதில்—
நன்று சென்று தொன்று நின்ற ஒன்ற தென்று முன்பு கன்ற
நங்க ளின்ப மைந்த! உம்பர் பெருமானே. (4)

குறிப்பு: சங்கை - சந்தேகம்; 'இறையனாரகப் பொருளுரை' பற்றி எழுந்த ஐயம். விண்ட-(உண்மையை) வெளியிட்ட. குணி-ஊமை; இது 'உருத்திர சன்மராய்க்' கந்தவேள் சங்கத்தார் கலகந் தீர்த்த திருவிளையாடலைக் குறிக்கும். அந்தம் - அழகு; முடிவு. குந்த-ஈட்டிபோன்ற. பந்தன்-சம்பந்தர். சண்பை - சீகாழி.

சந்தம் மிஞ்சும் இன்சொல் தங்கு பண்கள் - தேவாரப் பாக்கள். பண்டை என்பு-பழைய எலும்பு. பெண்-பூம்பாவை. சொல் கொஞ்சு-பூம்பாவைப் பதிகத்தை (மயிலையிற்) பாடிய நந்தநம்பி-ஆடவருட் சிறந்த நந்தனார். நந்தம் நம்பி-நமது நம்பியாரூரர்; சுந்தரர் எனினுமாம். அன்பு உவந்த எனப் பிரிக்க. கம்பர் - ஏகம்பர். தொன்று - பழைய. ஒன்று அது - ஒப்பற்றது. புகன்ற - (உபதேசம்) சொன்ன.

அடாணு]        [ஆதி

எமன்கைப் படாதிருக்க

தாத்தாத்த தானன தனதான

வாட்பார்க்கும் நீள்கணி — மலைமாது—
மாற்றார்க்கு நேரிடி — தருபாலா;
கோட்பாட்டை யேகரு — தறியேனைக்—
கூற்றார்க் குணுவென — விடலாமோ;
நாட்பார்த்து போமெனும் — அடியாரை—
நாப்பாட்டி லாதர — வருள்பாலா;
கேட்பார்க் கெலாம்வரம் — அருள்வோனே—
கீழ்ப்பாக்கம் மேவிய — பெருமாளே. (5)

குறிப்பு: வாள் பார்க்கும்-வாளைப்போன்ற. மாற்றார்க்கு - பகைவர்க்கு. நேர் இடி-நேரான அசனி போல்வாள். கோட்பாடு-கொள்கை. கூற்றார்க்கு-யமனுக்கு. உணு-உணவு. அடியார்-அப்பர் சுவாமிகள். நாள் பார்த்து - (மதுரைக்குப் போக நல்ல) நாள் பார்த்து. நாப் பாட்டில்- நாவால் பாடிய 'வேயுறு தோளி'' என்ற பதிகத்தால். பாலா-(சம்பந்தக்) குழந்தையே. இத் திருப்பதிகம் 'கோளறு திருப்பதிகம்' என்னும் திருப்பெயர்பூண்டு இரண்டாந்திருமுறைக்கண் திகழ்கின்றது.

சாமா]        [ஆதி

துன்பம் தீர்த்தருள

தய்யனு தன்னதன தந்ததான

பையரா உண்ணுமொரு — குண்டலீசா—
பள்ளிபேண் அண்ணல்திரு — மங்கைபாகா;
ஐயரா எண்ணிநின — டைந்தபேதை—
அல்லல்தீர் எண்ணமதும் — உண்டோதான்;
செய்யராம் எம்மரனை — வந்திசேயே—
செல்வமே! வெண்ணெய்நிகர் — சிந்தையானே!
துய்யராம் தன்முனிவர் — நெஞ்சவாணு—
சொல்லென்வாய் சொன்னவொரு — தம்பிரானே. (6)

குறிப்பு: பை-விடப்பை. குண்டலி-மயில். குண்டலீசா-மயிலேறும் இறைவா! பள்ளி-(பாம்புப்) படுக்கையை. பேண் - விரும்பும். திரு மங்கை - லட்சுமி போன்ற (அல்லது ஈன்ற) நங்கை - வள்ளி.

ஐயரா-தலைவராக. நின் அடைந்த-நின்னை வந்தடைந்த. உண்டோ- உண்டோ; அது-அசை. செய்யர் - சிவந்தவர். வந்தி - வழிபட்ட. சேய்ஞலூரில் முருகவேள் சிவனை வழிபட்டார். துய்யர்-தூயவர். சொல்- சொற்களை, என்வாய்-என் (வாய்) மூலம், சொன்ன-தெரிவித்த.

## III. சதாசிவப் பதிகம்*

ஹரிகாம்போதி]　　[சுத்தாங்கம்

அறுசீரடி யாசிரிய விருத்தம்

மாதாளும் பாகத்து மன்ருடி வானவர்க்கு
மருந்தா வானைத்
தாதாளும் மலர்க்கொன்றைத் தாரணியும் சடையுடைய
தாணு தன்னைக்
கோதாளும் எனையாளும் கொள்கையனைக் கும்பிடுவார்
உள்ளக் கோயிற்
போதாளும் புண்ணியனைக் கண்ணியனைச் சதாசிவனைப்
போற்றி னேனே. (1)

குறிப்பு: தாது-மகரந்தம். தாணு-சிவன். கோது-குற்றம். உள்ளக் கோயிற்போது - உள்ளக் கோயிலாகிய தாமரை மலர்.

மங்கையொரு பங்குறையும் மன்ருடி மாணிக்க
வண்ணத் தானைக்
கங்கையவள் தங்குசடைக் காபாலி கந்தருவக்
காதி ஞனை
அங்கையினில் அனலேந்தி ஆடரனை அவரவருள்
அவரா வானைச்
சங்கையிலா அடியார்க்குச் சரணை சதாசிவனைத்
தமிழ்செய் தேனே. (2)

குறிப்பு: கந்தருவக் காதிஞன் -அச்வதரர், கம்பளர் என்னுமிரு கந்தருவர்-சிவனிருகாதில் எப்போதும் பாடிக்கொண்டிருப்பர். சங்கை - ஐயப்பாடு. தமிழ் செய்தேன்-தமிழாற் பாடினேன்.

மடந்தையொரு கூறுடைய மன்ருடி வல்லாளன்
மகவா ஞனைக்
குடந்தையினிற் குடமூக்கும் கீழ்க்கோட்டம் காரோணம்
குடிகொள் வானை
மடந்தைவரு சிந்தையராம் மாதர்கள்பால் மதுரையிலே
வளைவிற் ருனை
விடந்தைவரு களத்தானை வேதியனைச் சதாசிவனை
விண்டுய்ந் தேனே. (3)

குறிப்பு: வல்லாளன் - திருவருணை மன்னன். மடம் தைவரு - மடமை பொருந்திய. விடம் தைவரு-விடம் பொருந்திய. களம்-கழுத்து. விண்டு - பாடி.

---

* இப் பதிகம் நடராசர் - சிவகாமியம்மை இவர் திருமுன் பாடப் பெற்றமையின் 'மன்ருடி' என ஒவ்வொரு பாடலிலும் குறிக்கப்பெற் றுள்ளது.

மலைமகளோர் பாலுறையும் மன்றுடி வழிபடுவார்
மனத்துள் ளானைச்
சிலைசிலையாக் குனித்தவனைத் தேவாதி தேவர்க்கும்
தெரியொண் ணானைக்
கலைபலவும் கற்றவனைக் கற்றார்க்கும் கருத்தளிக்கும்
கண்ணு வானை
அலைகடல்நஞ் சுண்டவனை அரனவனைச் சதாசிவனை
அறைந்துய்ந் தேனே. (4)

குறிப்பு: *சிலைசிலையா-மலையை வில்லாக. குனித்தவன் - வளைத்தவன். அறைந்து-சொல்லி.*

மடமயிலாம் சிவைபுடைவாழ் மன்றுடி மாதவர்க்குண்
மணியா வானைக்
கடகளிற்றை உரித்தானைக் காமனையும் காலனையும்
காய்ந்த கோனைப்
படமுடைய அரவினையே ஆபரணம் எனப்பூணும்
பண்பி னானைச்
சடமுடையைத் தீர்த்தருளும் சங்கரனைச் சதாசிவனைச்
சாற்றி னேனே. (5)

குறிப்பு: *கடகளிறு-மதயானை. சடமுடை-முடைச்சடம்; நாற்ற உடம்பு. உடலெடுக்க முடைப்படுத்தும் இருவினைகள் எனினுமாம்.*

வனிதையொரு பால்வாழும் மன்றுடி மாலுக்கும்
மலரோ னுக்கும்
இனிதறிய வொண்ணாத எம்மானை எண்மூர்த்தம்
இயைந்துற் றானைப்
புனிதர்களாய் வாழ்பவர்க்குப் பொருட்டான குறிக்கோளைப்
புலியில் மேவும்
மனிதருக்கும் வானவர்க்கும் மன்னவனைச் சதாசிவனை
வணங்கி னேனே. (6)

குறிப்பு: *எண்மூர்த்தம்-புவி, புனல், தீ, வளி, வெளி, கதிர், மதி, உயிர் என்பன. குறிக்கோள் - லக்ஷியம்.*

மஞ்சுகுழல் நங்கையொர்பால் மன்றுடி வள்ளலர்க்கும்
வள்ளல் தன்னைத்
துஞ்சுமிருள் போலிருண்ட கண்டத்தெம் கூத்தரசைத்
தோற்றம் ஈறு
விஞ்சுநடு இல்லானை அலிஆண்பெண் ஆவானை
மேலை யார்கள்
நெஞ்சுகந்து நிலைத்திருக்கும் நித்தியனைச் சதாசிவனை
நினைந்துய்ந் தேனே. (7)

குறிப்பு: மஞ்சு - மேகம். வள்ளலர் - வள்ளல்கள். துஞ்சும் - தங்கும் (இரவுபோன்ற). கூத்தரசு - நடராசன். விஞ்சு - எஞ்சியுள்ள.

வரைமகளாம் பரைஒருபால் மன்றுடி மழைபுல்கு
வேணி யானைக்
கரைபுரண்ட அருள்வெள்ளம் கலந்தோடும் சிந்தையனைக்
காணு மாறே
அரைமாதா யாயவனை அப்பாலும் இப்பாலும்
அடர்ந்துள் ளானைத்
திரைமகள்சேர் செஞ்சடையெம் தேசிகனைச் சதாசிவனைச்
சிந்தித் தேனே. (8)

குறிப்பு: மழை - மேகம்; சிவபிரான் சடையில் மேகமும் உண்டு. அரை மாதாய் - அர்த்தநாரியாய். திரைமகள் - அலைமகளாகிய கங்கை.

மாதாவாம் உமையொருபால் மன்றுடி வடிவமுழு
தழகி யானை
ஆதாரம் ஆவானை அனைவர்க்கும் அணுவினுக்கும்
அணுவா வானை
மீதாரப் பெரியவற்றுட் பெரியவனை மேதக்கார்
மேதை தன்னைக்
காதாரத் தேவாரக் கவிகேட்கும் சதாசிவனைக்
கண்டுய்ந் தேனே. (9)

குறிப்பு: மீது - மேலும். ஆர - மிக.

மாமகளைப் பாகமதாள் மன்றுடி வழக்கிட்டு
வாதில் வென்ற
கோமகனை மெய்கண்டார் அருணந்தி இவர்தமக்கும்
குருவா வானைத்
தூமகனை மறைஞான சம்பந்தர் தோத்திரத்திற்
சொக்கி னானைப்
பூமகனைச் சிரங்கொய்த பொற்கையனைச் சதாசிவனைப்
புகழ்ந்துய்ந் தேனே. (10)

குறிப்பு: மா - மலை. வாதில்வென்ற - மாமனுச்சென்று வழக்குரைத்த திருவிளையாடல் செய்த. பூமகன் - பிரமன்.

வளையணிகை மடவரல்பால் மன்றுடி வெள்ளிவரை
வாணன் தன்னைத்
தொளையணிகைத் தும்பிக்கைப் பிள்ளையினுற் கூர்மத்தைத்
தொலைத்த கோவைக்
கிளையணிகைக் குமரனுற் கேழல்மருப் பொடித்தொருமால்
செருவம் போக்கி
வளையணிகை மாற்கருளும் வள்ளல்தனைச் சதாசிவனை
வந்தித் தேனே. (11)

குறிப்பு : கூர்மம் - ஆமை. கி(ள்)ளை - (அருணகிரியாராம்) கிளி கேழல்-பன்றி. மாற்கு வளை அருளும் - திருமாலுக்குச் சங்காயுதத்தைக் கொடுத்த.

வலைஞர்மகள் ஒருபுறமா மன்றாடி மதிப்பரிய
மாணிக் கத்தைக்
கலைஞரெலாம் கண்டுருகும் ஆடலர சாவானைக்
கற்றை வேணி
மிலைமதிசேர் விலைமதிக்க ஒண்ணாத மேனியனை
மெய்ஞ்ஞா னத்தைத்
தலையாய தலைவனைஎன் தலைமேல்வாழ் சதாசிவனைச்
சார்ந்துய்ந் தேனே. (12)

குறிப்பு : வலைஞர்மகள் - தேவி செம்படவர் குலத்தில் அவதரித்தவள்; பார்வதி. மிலை - சூடிய.

## IV. தில்லைச் சிவகாமியம்மை பதிகம்

ஆநந்தபைரவி] [சுத்தாங்கம்

### கட்டளைக் கலித்துறை

பற்றாய் எவர்க்கும் பரிந்தருள் செய்யும் பராபரையே!
முற்றா இளமுலை முத்தம்மையே! சிவ மோகினியே!
எற்றாலும் உன்னை மறந்தறியேனை ஏன்றருளாய்!
வற்றாத தில்லைச் சிவகாமி அம்மே மனோமணியே! (1)

குறிப்பு : வற்றாத - எவ்வளவும் குன்றாத. மனோமணி - மனத்துக்குள் மணிபோல்பவள்.

ஓரம்பு கொண்டே இராவணன் றன்னை ஒழித்தவனும்
கூரம்ப தொன்றினால் முப்புரஞ் சுட்ட குணாலயனும்
ஏரம்ப னுங்கந்த வேளும் இனனும் எலாமொருநீ
ஓரம்பை! தில்லைச் சிவகாமி அம்மே! உமையவளே. (2)

குறிப்பு : ஒழித்தவன் - இராமன்; திருமால். ஏரம்பன் - விநாயகர். இனன்-சூரியன். ஓர் அம்பை - ஒப்பற்ற அம்பிகை.

ஓதா துணர்ந்திட்ட உத்தமர் தங்கள் உளத்துறவாய்
ஆதார மாய்நிற்கும் அம்பிகையே!எனை ஆட்கொளுமுன்
பாதார விந்தம் பணிந்தபின் ஆரைப் பணிவனம்மா!
மாதான தில்லைச் சிவகாமி அம்மே! வழங்கருளே. (3)

எல்லாரும் ஒன்றென் றிருப்பதற் கும்மடி யாரவர்க்கே
சொல்லாலும் மெய்யாலும் உள்ளத்தா லுந்தொண்டு சூழ்வதற்கும்
வல்லாளனாச்செய் தெனையாள்வை கொல்லோ! வயிணவியே!
செல்லாரும் தில்லைச் சிவகாமி அம்மே! சிவைஉமையே! (4)

குறிப்பு : செல் - மேகம்.

**வேதங்கள் எல்லாம் 'அறிந்திலம்' என்று மிகமுழங்கும்**
**பாதங்கள் தந்தெனை ஆண்டருள் வாய்! திருப் பாற்கடலில்**
**ஓதங்கள் மோதத் துயில்கொள்ளு மாலுக் கொருதங்கையே!**
**மாதங்கி! தில்லைச் சிவகாமி அம்மே! மலைமகளே. (5)**

குறிப்பு : ஓதங்கள் - ஈரக்காற்றுக்கள். மாதங்கி - மதங்க முனிவரின் (அல்லது மதங்கர் குலப்) பெண்.

**கூத்தாடும் எந்தை குறிப்பொத்துத் தாளம் குழித்திழைக்கும்**
**ஆத்தாள் உனையன்றி ஆருளர் என்றன்னை ஆட்கொள்பவர்**
**ஏத்தா திதுவரை யானிருந் தேனெனி னும்மெனை நீ**
**பூத்தாள்வை தில்லைச் சிவகாமி அம்மேயுன் புன்னகையே. (6)**

குறிப்பு : உன் புன்னகை பூத்து ஆள்வை என அந்வயிக்க.

**ஒழுக்கம் சிறிதும் இலாமல் உலகத் துழலுமென்றன்**
**இழுக்கை யகற்றி இனிதாள் வதுமுன் இயற்கையன்றே!**
**விழுப்பம் பெறுமாறு மேதினி தன்னில் விரைந்தருளாய்!**
**அழுக்குறுத் தில்லைச் சிவகாமி அம்மே! அபிநவையே! (7)**

குறிப்பு : விழுப்பம்-சிறப்பு. அழுக்குறு-நிர்மலமான. அபிநவை - புதியவள்.

**தாதிமி தோதி திமியென்ன ஆடும் சதாசிவன்பாற்**
**பாதியு மான பரசிவை யே! அருட் பார்வையினுற்**
**கோதிலி யாஎனைச் செய்வதும் உன்றன் குலத்தொழிலே**
**ஏதினி தில்லைச் சிவகாமி அம்மே! இசைத்தருளே. (8)**

குறிப்பு : ஏது - காரணம். இனி - இனியாகிலும். ஏது - என்ன! இனி - இனியேனும் எனலுமாம். என்னைக் குற்றமற்றவளுகச் செய்யாத காரணம் என்ன? சொல்லியருள்க என்றவாறு.

**பச்சை முகில்போற் றிருமேனி பெற்ற பசுங்கிளியே!**
**பிச்சை புகுவருன் கொண்கர் பிறகெனை ஆள்வதெவ்வா**
**றிச்சை அவர்மேல் விடுத்தனை அண்டி இறைஞ்சினன்யான்**
**கொச்சையால் தில்லைச் சிவகாமி அம்மே! குறிக்கொள்வையே. (9)**

குறிப்பு : கொண்கர் - மணவாளர். கொச்சை (மொழி)யால் இறைஞ்சினன் என்க.

**யாவரும் இன்புற் றிருக்கவே வேண்டும் என நினைப்பேன்**
**தேவரும் மூவரும் மானவ ரும்வந்து சேவைசெய்யும்**
**நீவரும் போதையே நெஞ்சினில் எண்ணியான் நிற்கின்றனன்**
**பூவரும் தில்லைச் சிவகாமி அம்மே! புரிந்துகொள்ளே. (10)**

குறிப்பு : மூவர் - அயன், அரி, அரன் மூவர். மானவர் - மானிடர். பூவரும் - பூமியில் உள்ள; அல்லது (தடங்களில்) தாமரைப் பூக்கள் மலரும்.

**காலம் கடந்தவள் கற்பனை தாண்டிய காரிகையாள்**
**சீலம் நிரம்பிய தெய்வமின் னாளென்று செப்புவரால்**
**ஓலம் பறையும் அடியார் பெருமக்கள்; ஒன்றுசொல்வன்**
**நீலங்கொள் தில்லைச் சிவகாமி அம்மேநீ அன்புருவே. (11)**

குறிப்பு : ஓலம் - அடைக்கலம். பறையும் - சொல்லும். நீலங் கொள் - நீலநிறங்கொள்.

## V. வாழ்த்து

**கேதாரகௌளம்]** **[சுத்தாங்கம்**

கட்டளைக் கலித்துறை

**வானம் வழங்க; பயிர்களெல் லாம்நல் வளம்பெறுக;**
**தானந் தழைக; தவம்பொலி வெய்துக; தண்டமிழர்**
**மானம் புவனமெல் லாஞ்சென்று வண்மை பறையறைக;**
**ஈனஞ் சிதைந்தடி யார்வாழ்க; என்றும் இறைவெல்கவே.**

குறிப்பு : வண்மை - வள்ளல் தன்மை. ஈனம் - இழிவு.

(முற்றும்.)

## பூசிக்க

**தனதன தனதன தனதன தானத் தனதான**

**கணபண மகவினை வகிவிதி காசைக் களைவோனே**
**கருதரும் வரியரி வனிவிர காவைக் கதிர்வேலா**
**புணர்வுணர் புகல்புக மகிழ்துதி பூசைப் ப்ரியவேளே**
**பொருதரு புரிபொறி வனிசுர பூவைப் பொழிவேணே**
**அணவுறும் அகல்பொழில் அகிலதி யாசைத் தலைவாசா**
**அருவுரு அரிபணி அனியர னைவைப் புரையாகா**
**குணதர புகழ்மலி முகில்வதி கோசைப் பதிவாழ்வே**
**குருபர புரிதவ முனிவரர் கோவைப் பெருமாளே.**

குறிப்பு: இவ்விழுமிய பாடல் அருட்கவியவர்களால் 15-5-1955 இல் பாடப்பட்டது. இஃது அறுநூற்றுக்கு மேலான பாடல்களாகப் பிரியும் கரந்துறை பாடலாக அமைந்த கவினுடையது.

# செய்திகளும் குறிப்புக்களும்

## ௧. பிறமொழிச் சொற்கலப்பினால் தமிழ் வளம்பெறுமாம்!

"தமிழ் ஆட்சிமொழியாகும்போது புரியாத தமிழ்ச் சொற்களைத் தவிர்க்க வேண்டும். பிறமொழிச் சொற்களைக் கலந்தே பல மொழிகள் வளம்பெற்றுள்ளன. 'சைக்கிள்', 'கமிஷனர்', 'டிரெயின்' போன்ற சொற்களை அப்படியே தமிழில் பயன்படுத்தினால் அதனால் தமிழ் மொழிக்கு இழப்பு ஒன்றும் ஏற்படாது."—என்று பாளையங்கோட்டை நகராட்சி மன்றம் அளித்த வரவேற்புக்கு விடை அளிக்கும்போது, தமிழகச் சட்டமன்ற அவைத்தலைவர் திரு. செல்லபாண்டியன் அவர்கள் பேசியுள்ளார். அதுவும் தமிழ்மொழி நகராட்சி மொழியாகும் திட்டத்தைத் துவக்கிவைத்தகாலை இத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளார்.

குறிப்பு: தமிழ் பிறமொழிக் கலப்பால் வளமுறுமா வாட்டமுறுமா என்ற ஐயத்திற்கே இடமில்லாத வகையில் பல அறிஞர்கள் பலமுறை பிறமொழிக் கலப்பால் தமிழ் கெடும் என்பதைத் திட்டவட்டமாக நிலை நாட்டியுள்ளனர். நாட்டு நிலை இங்ஙனமிருக்க, திரு. செல்லபாண்டியன் போன்றவர்கள் மிக எளிதாகப் பிறமொழிக் கலப்பால் தமிழ் வளமுறும் என்று தயங்காது கூறுவது வருந்தத்தக்க செய்தி — காலத்துக் கொவ்வாத கருத்துரை.

## ௨. இதற்கு என்ன பொருள்?

இந்தி பேசாத மாநிலங்களில் இந்திமொழியைப் பரப்பும் முயற்சியில் மைய அரசினர் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். இந்தியைக் கட்டாயமாகவோ விருப்பப்பாடமாகவோ பயிற்றுவிக்கும் பள்ளிகள் கல்லூரிகளின் நூலகங்கட்கு இந்திமொழி நூற்களை விலையின்றி ஏராளமாக வழங்கத் திட்டமிட்டுள்ளனர். இதற்கெனக் கதை, கட்டுரை, நாடகம், வரலாறு ஆகிய பல்வேறு பிரிவு இந்தி நூல்களை வாங்கவும் அரசு முனைந்துள்ளது.

குறிப்பு: எப்படியேனும் இவ்விந்தியத் துணைக்கண்டமெங்கும் இந்தி தனியாட்சி செலுத்தவேண்டும் என்னும் நோக்கத்தோடு இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதும், அதற்குப் பொதுமக்களின் வரிப்பணம் செலவிடப்படுவதும் சிந்திக்கற்பாலது. இந்தி கட்டாயமில்லை என்று பேசுகின்ற அரசினர், அதே நேரத்தில் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுகின்றனரே, இதற்கு என்ன பொருள்?

## ௩. வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்

இந்திய அரசின் மூன்றாவது மக்கள் அவையின் முதற்கூட்டம் கடந்த 16-4-62 இல் துவங்கியது. புதிய உறுப்பினர்கள் உறுதிமொழி கூறிப் பதவியேற்றனர். கனஇனத் தொழில்களின் அமைச்சராகப் பதவியேற்றுள்ள அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், திருமதி சௌந்திரம் ராமச்சந்திரன், மற்றுமுள்ள தமிழ்நாட்டு உறுப்பினர்கள் ஆகியோர் தமிழில் உறுதிமொழி கூறினர்.

குறிப்பு: தமிழில் உறுதிமொழி கூறிய அமைச்சர்களையும், பிற உறுப்பினர்களையும் வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம். அவர்தம் உறுதி மேலும் உறுதி பெறுவதாக!

### ௪. ஆளுநர் டாக்டர் சுப்பராயன் வாழ்க!

டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் மகாராட்டிர ஆளுநராக 16-4-62 இல் பதவி ஏற்றார். பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதி எச். கே. சிந்தாமணி பதவி உறுதிமொழிச் சடங்கை நடத்திவைத்தார்.

**குறிப்பு:** ஆளுநர் பதவிக்குப் பல்லாற்றானும் தகுதிவாய்ந்த டாக்டர் சுப்பராயன் அவர்கட்கு எமது வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### ௫. தமிழகப் புலவர் குழுவின் 11 ஆவது கூட்டம்

தமிழகப் புலவர் குழுவின் 11 ஆவது கூட்டம் 15-4-62 இல் வாலாசாபாத் இந்துமத பாடசாலையில் நடைபெற்றது. திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் வரவேற்புரை கூறினார். சென்னை உயர் நீதி மன்ற நடுவர் பா. ச. கைலாசம் விழாவைத் துவக்கி வைத்தார். குழுவினர்க்கு வாலாசாபாத் ஊராட்சி மன்றச் சார்பில் வா. து. நடராச முதலியார் அவர்களும், இந்துமத பாடசாலையின் சார்பில் நா. ப. தணிகை அரசு அவர்களும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளித்தனர். புலவர் பெருமக்கள் கருத்துரை வழங்கினர். புலவர் குழு அமைப்பாளர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் நன்றிகூறினார்.

### ௬. இந்திவெறிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அண்மையில் இந்தியப் பாராளுமன்றத்தில், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு. எஸ். என். சதுர்வேதி என்னும் உறுப்பினர் ஆங்கிலத்தில் பேசினார். இந்திமொழியாளர்கள் "இந்தியில் பேசுங்கள்! இந்தியில் பேசுங்கள்!" எனக் கூச்சலிட்டனர். அவர்களுக்கு விடையளிக்கும் முறையில் "நாம் மற்றவர்கள்மீது இந்தியைத் திணிக்க முயல்கிறோம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தக் கூடாது எனவேதான் நான் ஆங்கிலத்தில் பேசுகிறேன்" என்று கூறினார்.

**குறிப்பு:** திரு. சதுர்வேதியின் நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் அம்மன்றத்தில் எழும்பிய கூச்சல் இந்திவெறிக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதையும் நாம் உணரவேண்டும்.

### ௭. சோழ மன்னர் காலச் செப்பு நாணயங்கள்

சோழ நாட்டின் தலைநகராக விளங்கிவந்த பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தில், அண்மையில் இந்திய அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சித் துறையின் தென் பகுதிக் குழுவினர் சில நாட்கள் தங்கியிருந்து, பொதுமக்கள் உதவியுடன் 5 கல் சுற்றளவில் உள்ள சிற்றூர்களுக்குச் சென்று ஆராய்ச்சி செய்ததன் விளைவாகப் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட செப்பு நாணயங்களும் மற்றும் பலவகைச் சின்னங்களுடைய காசுகளும் பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திவந்த பல உருவங்கள்கொண்ட மணிகள், மண்பாண்டங்கள் முதலியனவும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனவென்று தெரிகிறது.

**குறிப்பு:** இத்தகைய புதைபொரு ளாராய்ச்சிகளைச் செய்யும் அரசினர் தமிழறிஞர்கள், வரலாற்றாசிரியர் ஆகியோர் கொண்ட ஒரு குழு அமைத்துக்கொண்டு அவர்களின் துணைகொண்டு ஆராய்ச்சியினை மேலும் விரிவுபடுத்துவார்களாயின் சாலப் பயனுடையதாகும்.

## அ. சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

1. முல்லாசாய்பு தெரு, சென்னை-1. 'சைவம்' இதழ் வெளியீட்டு விழா 26-4'-62 வியாழன் மாலை மிகச் சிறப்பாகச் சென்னை தங்கசாலைத் தெரு தொண்டைமண்டலம் பள்ளியில் நிகழ்ந்தது. கடவுள் வணக்கத்தின் பின் குருகுலம் அழகரடிகள் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். சென்னை உயர்நீதிமன்ற நடுவர், சு. கணபதியா பிள்ளை, பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமை பூண்டார்கள். உயர்திரு N. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் (கூட்டுறவு அமைச்சர், தமிழ்நாடு) வெளியீட்டை வெளியிட்டுள்ளார்கள். உயர்திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ. பி. எல். அவர்கள் (ஆணையர், இந்து அறநிலைக்கழகம் சென்னை-1.) பாராட்டுரை வழங்கினார்கள். உயர்திரு. K. இராமதாஸ் M.L.C. அவர்கள் நன்றியுரை நவின்றனர். கூட்டம் இனிது நிறைவுற்றது.

## ௯. 'நித்திலத் குவியல்' வெளியீட்டு விழா

'மாணவர் மன்றம், சென்னை' 12. வெங்கடஐயர் தெரு. சென்னை-1. 26—4'—62 வியாழன் மாலை 'நித்திலக் குவியல்' வெளியீட்டுவிழா மாணவர் மன்ற நிலையத்தில் நிகழ்ந்தது. உயர்திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். உயர்திரு. க. அன்பழகன் M. A. M. L. C. அவர்கள் வெளியீட்டை வெளியிட்டு வாழ்த்துரைத்தனர்.

## ௧௦. சிவபக்த சரிதம்

6-5-62. மாலையில் புரசை எம். சி டி. முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளித் தெலுங்கு இலக்கியச் சங்கம் "சிவபக்த சரிதமு" என்னும் திருப்பெயருடன் சேக்கிழார் அருளிய பெரியபுராண மொழிபெயர்ப்பு நூலொன்றை வெளியிட்டுள்ளது. இந் நூலை அறநிலைய அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் வெளியிட்டனர். இப் பேரவைக்கு முன்னாள் நீதிபதி உயர்திரு. டபிளியூ. எஸ். கிருட்டிணசாமி நாயுடு தலைமை பூண்டனர்.

குறிப்பு: பெரிய புராணம் தமிழக வரலாற்றின் உண்மையுணர்த்தும் ஒளிவிளக்கு. தெலுங்கன்பர்களும் இவற்றை யுணர்ந்தின்புற இந் நூல் பெருந்துணையாகும்.

## ௧௧. நேருவை ஐந்தெழுத் தோதுவித்தல்:

அண்மையில் இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள் அரித்துவாரம் என்னும் இடத்திற்குச் சென்றிருந்தபோது, துறவிகள் பலர் நேரு அவர்கட்கு நெற்றியில் பொட்டிட்டு நல்வாழ்த்துக் கூறினர். அவர்களுள் அகவை முதிர்ந்த துறவி ஒருவர் நேரு அவர்களை அணுகிக் கரங்குவித்து "ஓம் நமசிவாய" என்று வணக்கங் கூறினர். ஆனால், நேரு அவர்கள் அத்துறவியின் சொல்லைப் பொருட்படுத்தாது மேற் சென்றார். துறவி அவரைத் தடுத்து, மீண்டும் 'ஓம் நமசிவாய' என்று சொல்லி அவரையும் சொல்லச் செய்தார்.

குறிப்பு: தொன்று தொட்டு இச் சீரிய வழக்கம் இருந்திருக்கின்றது. இதன் விரிவாகவே தென்னகத்தில், "தென்னா டுடைய சிவனே போற்றி எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் தூய தனித்தமிழ் மறைகள் கூட்டங்களில் வழங்கப்பெறுகின்றன. இனி இவை தனிமுறையிலும் வழங்கப்பெறுதல் வேண்டும்.

# மதிப்புரை

**"சைவம்"**

ஆசிரியர்: 'குருகுலம் அழகரடிகள்' இத்திங்களிதழ் 'சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத் (1, முல்லாசாகிபு தெரு, சென்னை-1.) தினரால் வெளியிடப் பெறுகின்றது. தமிழகத்தில் மிகப் பழமையாகவுள்ள கழகங்கள் சிலவற்றுள் இதுவே தனி மிகப்பழமையானதென்ப. இத் திருக்கூட்டம் 64 ஆண்டுகளுக்குமுன் தோன்றிய (1898) தாகும். இதனைத் தொடங்குவித்த சைவப் பெரியார் இருக்கம் சிவத்திரு ஆதிமூலம் என்னும் பேரன்பினராவர்.

47 ஆண்டுகளுக்குமுன் இதன் சார்பில் 'சைவம்' என்னும் திங்கள் இதழ் தொடங்கப் பெற்று 10 ஆண்டுகள் நல்லமுறையில் நடந்துவந்ததென்ப: அக்காலங்களில் அவ்விதழ் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. அதன்கண் வந்த கட்டுரைகள், சிவஞான போதவிளக்கங்கள், சைவவுண்மைகள் மிகப் பலவாகும். அதுபோல் அதன் தொடர்பான இவ்விதழும் அப்பெயரினைத் தாங்கியே வருகின்றது. இதன்கண் சிறந்த கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. மேலும் ஆசிரியர் அழகரடிகளார் பல்லாண்டுகளாகச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் விரிவுரையாற்றிச் சிறப்புற நிறைவெய்திய திருமந்திர விளக்கவுரை தொடர்ந்து வெளிவரும் என்பது சைவவுலகிற்கு நந்தாப்பேரமுதளிப்பதாகும். முன்னைப் பெரியார் போன்று திரு. ம. ரா. சம்பந்தம் அவர்கள் இஞ்ஞான்று பணியாற்றி வருகின்றனர்.

இவ்விதழினைச் செந்தமிழன்பர்களும் செந்நெறிச் செல்வர்களும் வாங்கியும் வாங்குவித்தும பெரும்பயன் எய்திச் சைவம் பெருக்குவார்களாக.

சிவன் திருவருளால் 'சைவம்' நாளும் சிறந்து நலம்பலபுரிந்து வாழ வாழ்த்துகின்றோம்.

**தமிழ் இலக்கிய வரலாறு:**

[பக்கங்கள் 260: விலை ரூ. 5-50 ஆசிரியர்: வி. செல்வநாயகம், எம். ஏ. தமிழ் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.]

மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்றவகையில், தெள்ளிய நடையில் தமிழ்இலக்கியத்தின் வரலாற்றைச் சங்ககாலத்தில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டுவரை சுருக்கமாக விளக்கி எழுதியிருக்கிறார் இந்நூலின் ஆசிரியர். இலக்கியவரலாறு மக்கள்வாழ்க்கையோடும், அரசியல் வரலாற்றோடும், சமயவரலாற்றோடும் பின்னிப் பிணைந்திருப்பதொன்றாகலான், அவற்றோடு பொருந்தவைத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றைச் சுவையுண்டாகுமாறு கூறிச்செல்கிறார். புலவர்களுடைய வாழ்க்கை, காலம் முதலியவற்றைப்பற்றிக் குறிக்காது இலக்கியங்களைப் பற்றியே முழுக் கருத்தையும் செலுத்தியுள்ளார்,

இந்நூல் தமிழிலக்கிய வரலாற்றைத் தொடர்ச்சியாகப் பொதுவகையான் அறிந்துகொள்ள விழைபவர் அனைவர்க்கும் மிகவும் ஏற்ற தொடக்க நூலாகும்.

—மு. ச.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.